# பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம்





## மகளிர் தொழில்முனைவோர்

பயிற்சி கையேடு



TAMIL NADU INSTITUTE OF URBAN STUDIES

LEAD KINDLY LIGHT

# தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம்

கோயம்புத்தூர்

பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ்

# மகளிர் தொழில் முனைவோர், பதிவேடுகள் பராமரிப்பு மற்றும் தணிக்கையியல் குறித்த பயிற்சி

# கையேடு

*ஆக்கம்*

*நகராட்சி நிர்வாக ஆணையரகம்*

*சென்னை*

பயிற்சி வடிவமைப்பு & செயலாக்கம்

**தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம்**

கோயம்புத்தூர்

© தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம்
கோயம்புத்தூர் - 641 011

பதிப்பு : 2008

வெளியிடுவோர்

**தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம்**
203, அழகேசன் சாலை,
சாயிபாபா காலனி,
கோயம்புத்தூர் - 641 011
தொலைபேசி : 0422 - 2441086
நிகரி : 0422 - 2457404
மின்னஞ்சல் : tniuscbe@vani.net
இணையம் : tnius.org

# முன்னுரை

நகர்ப்புற வளர்ச்சியில் நாம் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளில் நகர்ப்புற வறுமையும் ஒன்று. இவ்வறுமையினை நமது சமுதாயத்திலிருந்து முற்றிலும் அகற்றுவதையே முக்கிய குறிக்கோளாக கொண்டு டிசம்பர் 1997 ஆம் ஆண்டு மத்திய அரசால் உருவாக்கப்பட்டதே பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம் (Swarna Jayanthi Shahari Rojzar Yojana - SJSRY)ஆகும். மாநில அரசு மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் வாயிலாக இத்திட்டத்திற்கு பெறுமளவு நிதி ஒழக்கீடு செய்யப்பெற்றுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய கடமை என்னவெனில், அடிப்படையில் சமுதாயக் குழுவினை உருவாக்குதலும் அதன் வாயிலாக சுய தொழில் மற்றும் வேலை வாய்ப்புத் திட்டம் ஆகிய பிரிவுகளின் கீழ் பொருளாதார முன்னேற்றம் அடையச் செய்யவும் வழிவகுத்துக் கொடுத்தல் ஆகும். பொருளாதார முன்னேற்றம் ஏற்படுத்தி நகர்ப்புற வறுமை ஒழிப்பிற்க்காக செயல்படுத்தப்பட்ட முந்தைய திட்டங்களைப் போல் அல்லாது இந்தத் திட்டம் அடிப்படையில் சமுதாயக் குழுக்களை ஏற்படுத்துவதன் மூலம் சமுதாய மக்களின் நேரிடையான பங்களிப்பின் மூலமுமே செயல்படுத்தப்படுகிறது, மேலும் வறுமைக் கோட்டிற்குத் கீழ் வாழும் நகர்புற ஏழை மக்களை இலக்காகக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டம் பெண்களுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் பெண்களின் மூலம் நேரடியாக திட்டம் ஏழைக் குடும்பங்களைச் சென்றடைய ஒரு வாய்ப்பாக அமைகிறது. இத்திட்டம் தனது இலக்கினை வெற்றிகரமாக சென்றடைய வேண்டுமெனில் அதற்கான பயிற்சிகள் மற்றும் தகவல், கல்வி தொடர்பு போன்றவைகள் அத்தியாவசியமாகின்றன. இதை நடைமுறைப் படுத்துவதற்காக கோயம்புத்தூரில் செயல்பட்டுவரும் தமிழ் நாடு நகரியல் பயிற்சி நிறுவனமானது (Tamil Nadu Institute of Urban Studies) இத்திட்டத்தின் கீழ்ப் பயிற்சிகளை ஒருங்கிணைக்கும் முதன்மை நிறுவனமாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது. எனவே இத்திட்டத்தில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள், அலுவல் சார்ந்த களப்பணியாளர்கள் மற்றும் நகராட்சியின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு இத்திட்டம் குறித்த வழிமுறைகள், இத்திட்டக் கோட்பாடு, திட்ட செயலாக்கம், திட்ட கண்காணிப்பு மற்றும் ஆங்காங்கே நிகழும் வெற்றிச் செய்திகள் ஆகியவற்றை பயிற்றுவிப்பதிலும், தொகுப்பதிலும் இந்நிறுவனம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாகப் பொன் விழா ஆண்டு நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் நடைபெறுகின்ற தொழில் முனைதல், பதிவேடுகள் பராமரிப்பு மற்றும் தணிக்கையியல் ஆகிய தலைப்புகளில் அடிப்படைத் தகவல்கள் அடங்கிய இக்கையேடு, இத்திட்டத்தினை செயல்படுத்தி வரும் அனைத்துத் துறைசார்ந்த அலுவலர்கள் அனைவருக்கும் பயனுடையதாக இருக்குமென நம்புகின்றேன். இப்பயிற்சி கையேடு மிகவும் பயனுள்ளதாகவும், சிறப்பாகவும் தயாரித்த தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்தின் பேராசிரியர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுகள்.

பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டப் பயிற்சியினை நடத்துவதில் அனுபவமும் பயிற்சியும் பெற்று எங்களுக்கு முழு ஒத்துழைப்பை அளிது வரும் அனைத்து நகராட்சி ஆணையர்கள், உதவி திட்ட அலுவலர்கள் மற்றும் சமுதாய அமைப்பாளர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இயக்குநர்
கோயம்புத்தூர் - 641 011

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | பொன் விழா ஆண்டு நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டம் என்கிற சுவர்ணஜெயந்தி சஹாரி ரோஜ்கார் யோஜனா (SJSRY) | 1-8 |
| 2. | தொழில் முனைதல் | 9 |
| 3. | தொழில் மயமயாதலும், பொருளாதார மேம்பாடும் | 15 |
| 4. | சிறு தொழில் நிறுவனங்கள் : அவை எதிர்கொள்ளும் சவால்கள் | 24 |
| 5. | பதிவேடுகள் பராமரிப்பு | 34 |
| 6. | தணிக்கையியல் | 44 |

## பொன் விழா ஆண்டு நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டம் என்கிற சுவர்ணஜெயந்தி சஹாரி ரோஜ்கார் யோஜனா (SJSRY)

- நேரு ரோஜ்கார் யோஜனா
- ஏழைகளுக்கான நகர்ப்புற அடிப்படை வசதிகள்
- பிரதம மந்திரியின் ஒருங்கிணைந்த நகர்ப்புற வறுமை ஒழிப்புத்திட்டம்

ஆகிய இம்மூன்று திட்டங்களுக்குப் பதிலாக இந்திய அரசு நகர்ப்புற வறுமை ஒழிப்புக்கான புதிய திட்டம் ஒன்றைத் துவங்கியது. அதுவே சுவர்ண ஜெயந்தி சஹாரி ரோஜ்கார் யோஜனா. வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழும் மக்களுக்குக் கடனுதவி அளிப்பதற்காக இத்திட்டம் அரசால் துவங்கப்பட்டது.

**I திட்டம்**

மேற்கூறிய 3 திட்டங்களின் முக்கிய கூறுகளையும் உள்ளடக்கியதே இப்புதிய திட்டம். இது டிசம்பர் 1, 1997 ம் ஆண்டிலிருந்து இந்தியாவின் அனைத்து நகர்ப்புறப் பகுதிகளிலும் செயல்படுத்தப்படுகிறது.

கூலிக்கு வேலை அல்லது சுய தொழிலை வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள வேலையற்ற அல்லது தகுதிக்குக் குறைவான வேலையில் இருக்கும் நகர்ப்புற ஏழைகளுக்கு லாபகரமான வேலைவாய்ப்பை, சுய தொழிலைத் தொடங்குவதன் மூலமோ அல்லது கூலிக்கு வேலையின் மூலமோ ஏற்பாடு செய்வதே SJSRY திட்டத்தின் முக்கிய நோக்கம். இந்தத் திட்டத்திற்கான பண உதவியை 75 : 25 என்ற விகிதத்தில் மத்திய மற்றும் மாநில அரசுகள் பகிர்ந்து கொள்கின்றன. நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தில் வங்கிக் கடன் உதவிக்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. சுருங்கக்கூறின், நகர்ப்புறத்தில் வேலையின்றி இருக்கும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பிற்காக உருவாக்கப்பட்டதே இத்திட்டம். இத்திட்டத்தில் உபயோகிக்கப்படாத நிதி ரூ. 4888.75 லட்சம் இருக்கின்றது. அதில் ரூ. 2071.86 லட்சம் மத்திய அரசு நிதியும் ரூ. 2816.89 லட்சம் மாநில அரசு நிதியுமாகும். இது மூன்று வருடங்களாக ஒதுக்கப்பட்ட தொகையை செலவிடவில்லை என்பதையே காட்டுகின்றது. உபயோகிக்காமல் இருக்கும் ரூ. 4888.75 லட்சமும் சேர்த்து மொத்தம் 1997 -98 விருந்து 2004 - 05 வரை இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 13108.88 லட்சமாகும்.

**SJSRY ன் சிறப்புத்திட்டங்கள்**

a) நகர்ப்புற சுய வேலைவாய்ப்புத் திட்டம்

b) நகர்ப்புற கூலிக்கு வேலை திட்டம்

## *நகர்ப்புற சுய வேலைவாய்ப்புத் திட்டம்*

*சுய வேலைவாய்ப்பை உருவாக்குவதில் நகர்ப்புற தனிநபர் ஏழைகளுக்கான உதவிகள் :*

### *அடையாளம் காணுதல்*

*பயனிகளை அடையாளம் காணுவதற்காக ஒவ்வொரு வீட்டிலும் தனிநபர் சர்வே நடத்தப்படுகிறது. நகர்ப்புறத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களை பொருளாதார குறியீடுகள் மூலமாக மட்டுமில்லாமல் மற்ற குறியீடுகள் மூலமாகவும் அடையாளம் காணுதல் வேண்டும். வருட வருமானம் (ரூ. 385.40 X12 மாதம் X 5 நபர்கள் (சராசரியாக) ரூ. 23,124) ரூ. 23,124 க்குக் கீழ் உள்ள அனைவரும் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களாகக் கருதப்படுவர். அதற்கான சர்வே மே மாதம் 1998ல் நடத்தப்பட்டது. இதற்காக நகர்ப்புற மேம்பாட்டு அமைப்பு, நகர்ப்புற வறுமை ஒழிப்பு அலகு, நகர்ப்புற மேம்பாட்டில் ஆர்வமுள்ள அனைவரையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.*

*நகர்ப்புற மேம்பாட்டு மையத்தின் செயலாளர் - 11 அவர்களால் 27.10.1997 மற்றும் 28.101997 தேதியிட்ட ஆணை UDD/51/UPA/97 எண்ணின்படி வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழ்பவர்களின் வருட வருமானம் கணக்கிடப்பட்டது. இதற்கு அரசாங்க ஆணைஎண் UDD/67/UPA/97, தேதி 15.11.1997 ஒப்புதல் அளித்தது.*

*மாநிலத்தில் உள்ள நகரங்களில் நகரங்களில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளவர்கள் 8,91,771 குடும்பங்கள் என்று கணக்கெடுக்கப்பட்டது. ஆனால் மீண்டும் 31.03.2003ல் எடுக்கப்பட்ட கணக்கின்படி 9,00,431 குடும்பங்கள் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ளன என்று கண்டுபிடிக்கப்பட்டு அவர்களும் கணக்கில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.*

### *தகுதி*

*ஒன்பதாவது வகுப்பு வரை படித்த நபர், தகுதிக்குக் குறைவான வேலை அல்லது வேலையில்லாமல் இருக்கும் நகர்ப்புற இளைஞர்களின் குடும்ப வருமானம், வறுமைக் கோட்டிற்குக் கீழ் இருக்குமானால் அரசாங்க மானியத்துடன் கூடிய வங்கிக் கடனுதவி பெற தகுதியுடையவராகிறார்.*

### *குறைந்த / அதிகபட்ச வயது வரம்பு*

*வேலை செய்ய தகுதியுடைய, திறனுடைய அனைவரும் இத்திட்டத்திற்கு தகுதியானவர்கள்.*

### குடும்பம்

*ஒரு வீட்டில் எத்தனை சமையலறைகள் உள்ளன என்பதைக் கருத்தில் கொண்டு குடும்பங்களின் எண்ணிக்கை கணக்கிடப்படுகிறது.*

## செயல்படுத்தப்படும் இடங்கள்

ஒரு குறிப்பிட்ட இடத்தில் கூடுதலாகவோ, குறைவாகவோ மக்கள் தொகை இருப்பின் அதைக் கணக்கில் கொள்ளாது, நகர்ப்புறத்தின் அனைத்துப்பகுதியிலும் SJSRY திட்டம் செயல்படுத்தப்படும்.

## திட்டமதிப்பு

ஒருவர் அதிகபட்சமாக ரூபாய் 50,000 வரை இத்திட்டத்தின்கீழ் தனிநபர் கடனுதவி பெறலாம். இருவர் அல்லது அதற்கு மேற்பட்டோர் சேர்ந்து கூட்டாகத் தொழில் செய்ய விரும்பினால் அதிகமான அளவில் கடன் வசதி பெற்றுக்கொள்ளலாம். ஆனால் ஒவ்வொரு தனிநபரின் அதிகபட்ச கடன் ரூபாய் 50,000 மும் அதற்குக் குறைவாகவோதான் இருக்க வேண்டும்.

## மானியம்

ஒவ்வொரு திட்டமதிப்பிற்கும் 15% மானியம் வழங்கப்படும். இது அதிகபட்சமாக தனிநபர் ஒருவருக்கு ரூ. 7,500 மான்யமாக வழங்கப்படும். கூட்டாக இருவர் அல்லது அதற்கு மேற்பட்டோர் சேர்ந்து தொழில் செய்யும் போது ஒவ்வொரு தனிநபருக்கும் 15% அல்லது ரூ. 7,500 கணக்கிடப்பட்டு மானியமாக வழங்கப்படும்.

## விளிம்புத்தொகை *(Margin Money)*

திட்ட மதிப்பின் மொத்தத் தொகையில் ஒவ்வொரு கடனாளியும் 5% பங்களித்திருக்க வேண்டும். முன்பே குறிப்பிட்டுள்ளது போல கூட்டாகச் சேர்ந்து அதிகபட்சமாக ரூபாய் 5,00,000 வரை பெறலாம். மானியமாக 15% அல்லது ரூபாய் 7,500 பெற்றுக்கொள்ளலாம். அதே போன்று 5 சதவீதத்தைத் திட்ட மதிப்பில் தனது பங்காக ஒவ்வொரு கடனாளியும் கொண்டு வரவேண்டும்.

## திருப்பிச்செலுத்துதல்

மூன்றிலிருந்து 7 வருடங்களுக்குள் கடனாக வாங்கப்பட்ட பணம் முறையாகத் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். இவர்களுக்கு 6 லிருந்து 18 மாதங்கள் வரை அவர்கள் தொழிலைப் பொறுத்து வங்கியால் விடுமுறை காலமாக அறிவிக்கப்படும்.

## செயல்படுத்தப்படும் மக்கள்தொகை

SJSRY திட்டத்தின் கீழ் எத்தனை பேருக்குக் கடனுதவி வழங்குவது என்பதை மாநில அரசு, திட்டத்தின் வரைமுறைகளுக்குட்பட்டு அதே சமயம் பயனாளிகள் அடைந்த பலன்களை கருத்தில் கொண்டு முடிவு செய்யும்.

**பொதுவான விதிமுறைகள்**

- ✓ வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ளவர் (ரேஷன்கார்டு இருக்கவேண்டும்).
- ✓ வயது 18-50க்குள் இருக்க வேண்டும்.
- ✓ செய்யப்போகும் தொழிலைப்பற்றிய அறிவு வேண்டும்.
- ✓ இரண்டு பாஸ்போர்ட் அளவு புகைப்படம்
- ✓ தொழில் செய்வதற்கான இடவசதி
- ✓ பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெறாதவரும் விண்ணப்பிக்கலாம்.

**நகர்ப்புறப் பகுதிகளில் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் (DWCUA)**

**நடவடிக்கைகள்**

இத்திட்டமானது நகர்ப்புறத்திலிருக்கும் ஏழைப்பெண்கள் குழுவாகச் சேர்ந்து சுய தொழில் செய்வதற்காக ஆரம்பிக்கப்பட்டது. அக்குழுக்கள் தங்கள் திறனுக்கும், பயிற்சிக்கும் ஏற்றவாறு பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடலாம். அப்பொருளாதார நடவடிக்கையானது அப்பகுதியின் சூழ்நிலைக்கு ஏற்றதாகவும் இருக்கவேண்டும்.

**குழுவின் அளவு**

இக்குழுவில் குறைந்தது 10 நகர்ப்புற ஏழைப்பெண்கள் சேர்ந்து இருக்கவேண்டும். ரூ. 1,25,000 அல்லது 50 சதவீதம் திட்ட மதிப்பில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்படும். இக்குழுவை கடனுதவி சங்கமாக மாற்றக் குழுவின் நடவடிக்கைகள் அனைத்தும் பலப்படுத்தப்படும்.

**ரூ. 2,50,000 திட்ட மதிப்பு இருக்கும் போது கடனுதவி**

திட்ட மதிப்பில் 5 % விளிம்புத்தொகையாக பயனாளி கொடுக்க வேண்டும். மீதித் தொகை கடனுதவியாக வழங்கப்படும்.

**கடனை திருப்பிச் செலுத்தும் முறை**

நகர்ப்புற சுய வேலை வாய்ப்புத் திட்டத்தில் உள்ள முறையே இந்தத்திட்டத்திலும் பின்பற்றப்படுகின்றது.

**வருமான வரம்பு**

ஒவ்வொரு குழு உறுப்பினரும் திட்டக் கமிஷன் நிர்ணயித்த நகர்ப்புற வறுமைக்கோட்டு வரம்புக்குள் வருபவராக இருக்க வேண்டும். SJSRY திட்டத்தின் கீழ் பயன்பெறும்

பயனாளிகள் வருட வருமானத்தின்கீழ் அல்லாது மாத வருமானத்தின் கீழ் அடையாளம் காணப்படுகிறார்கள்.

## நெறிமுறைகளும் வழிகாட்டிகளும்

செயல்படுத்தப்படும் உள்குறியீட்டு மக்கள் தொகை **(Sub Targets)**

SJSRY திட்டத்தின் கீழ் பயன்பெறும் பயனாளிகளில் 30 சதவீதத்தினர் பெண்களாக இருக்க வேண்டும். அதே போன்று குறிப்பிட்ட பகுதியில் இருக்கும் மக்கள் தொகையின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினரின் எண்ணிக்கை அளவு இருக்க வேண்டும். மேலும் உடல் ஊனமுற்றோர் சிறப்புச் சலுகையாக 3% இருக்க வேண்டும்.

இந்தத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் கடனுதவி தொழில் செய்வதற்கான முன்பணமாக சிறப்புப் பிரிவின் கீழ் கருதப்படவேண்டும். கடனுதவி விண்ணப்பங்களின் மீது விவாதமின்றி குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் கடன் வழங்கப்பட வேண்டும். அதாவது ரூபாய் 25000 வரை உள்ள விண்ணப்பங்கள் 2 வாரங்களிலும் ரூபாய் 25000க்கு மேல் கடனுதவி கோரும் விண்ணப்பங்கள் 8 - 9 வாரங்களுக்குள் கடனுதவி செய்ய வேண்டும்.

## கடன் பாக்கியில்லா சான்றிதழ்

கடனுதவி விண்ணப்பத்தில் மத்திய மற்றும் மாநில அரசு நிதி நிறுவனங்களில் இருந்தோ எந்தவிதமான கடன் நிலுவையும் பெறவில்லை என்பது குறித்து விளக்கியிருக்க வேண்டும். விண்ணப்பத்தில் குறிப்பிட்டிருக்கும் செய்திகள் அனைத்தும் உண்மை என்று கடனாளி உறுதி கூறியிருக்க வேண்டும். பயனாளி விண்ணப்பத்தில் கொடுத்திருக்கும் செய்திகள் அனைத்தும் உண்மை என்று கருதும் பட்சத்தில் வங்கிகள் கடன்பாக்கியில்லா சான்றிதழ் அவசியம் இணைக்க வேண்டும் என வற்புறுத்தத் தேவையில்லை. அவ்வாறு செய்யும் போது காலதாமதமின்றி விண்ணப்பங்கள் மீது கடனுதவி அளிக்க இயலும்.

சில நேரங்களில் வங்கியாளர் பயனாளியின் உண்மையான கடன் நிலை பற்றித் தெரிய விரும்பினால் அப்பகுதியில் இருக்கும் மற்ற வங்கிகளுக்கும் பயனாளி அளித்த கடனுதவி விண்ணப்பத்தின் நகலை அனுப்பி அதனை நிரப்பித் தருமாறு கூறலாம். இவ்வாறு நகல் விண்ணப்பங்கள் பெற்ற வங்கிகள் கடனாளியைப் பற்றிய விவரங்களை அதிகபட்சமாக 10 நாட்களுக்குள் தெரிவிக்க வேண்டும். 15 நாட்களுக்குள் எந்த விதமான பதிலும் மேற்குறிப்பிட்ட வங்கிகளிலிருந்து வரவில்லையென்றால் அந்த வங்கியில் பயனாளிக்கு எந்த விதமான நிலுவைத் தொகையும் இல்லை என்பது உறுதியாகும். மேலும் இந்தவிதமாகப் பயனாளியை பற்றிய விவரங்கள் கொடுப்பதற்கு சேவைக் கூலி எதையும் பெறக்கூடாது. கடன் இல்லா சான்றிதழ் வழங்குவதற்கும் சேவை கூலி பெறக்கூடாது. ஏனென்றால் ஒவ்வொரு வங்கியும் இதை போன்ற செயலை அடுத்த வங்கிக்குச் செய்ய வேண்டும்.

## விண்ணப்பங்கள் மறுக்கப்படுதல்

வங்கிக் கிளை மேலாளருக்கு ஆதி-திராவிட / பழங்குடியினருக்கு அனுப்பும் விண்ணப்பங்கள் தவிர மற்ற விண்ணப்பங்களை மறுக்கும் உரிமை உள்ளது. அப்படி மறுக்கப்பட்ட விண்ணப்பங்கள் கோட்ட / வட்டார அளவிலான வங்கி மேலாளர்களால் சரிபார்க்கப்படும். தாழ்த்தப்பட்ட பழங்குடியினரின் விண்ணப்பங்கள் வங்கியின் கிளை மேலாளருக்கும் அதிகமான தகுதியுடையவர்களால் மட்டுமே நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் குறிப்பிட்ட காரணங்கள் அல்லாது நிராகரிக்கப்படக் கூடாது. அப்படி நிராகரிக்கப்பட்டால் அவை முறையாகத் தெரிவிக்கப்படவேண்டும்.

## பயிற்சி

இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்படும் பயனாளிகளுக்கு அரசு தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கின்றது. இப்பயிற்சியானது வங்கிக்கடன் பெற மிகவும் அவசியம். தொண்டுநிறுவனங்களின் மூலம் ஏற்கனவே தொழில் முனைவோர் பயிற்சி பெற்றிருந்தால் மீண்டும் இப்பற்சியைப் பெற வேண்டிய தேவை இல்லை அல்லது ஏதேனும் ஒரு தொழில் திறனை பெற்றிருந்தாலோ அல்லது பயிற்சி பெற்று தனியார் / அரசு பொதுவுடமை நிறுவனங்களில் சான்றிதழ்கள் பெற்றிருந்தாலும் தொழில் முனைவோர் பயிற்சிபெறத் தேவை இல்லை. குறிப்பிட்ட தொழில்களுக்கு தனி / சிறப்புப் பயிற்சி தேவைப்படவில்லை என்றாலும் அவருக்கும் பயிற்சியிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

## வட்டி வீதம்

இந்திய ரிசர்வ் வங்கி என்ன வட்டி வீதம் பெற வேண்டும் என்று குறிப்பிடுகின்றதோ, அந்த வட்டியே கடன் தொகைகளின் மீது வசூலிக்கப்படும்.

## முறையாகத் திருப்பிச் செலுத்தாதவர்

வங்கியில் முன்பே வாங்கியிருந்த கடனை முறையாகச் செலுத்தாதவர், இத்திட்டத்தின் கீழ் கடனுதவி பெற தகுதியற்றவராகிறார்.

## சுய உதவிக்குழுக்களால் ஆரம்பிக்கப்படும் வங்கி சேமிப்புக் கணக்கு

சுய உதவிக்குழுக்களும் வங்கியில் சேமிப்புக் கணக்கு (அரசு ஆணை எண் : DBOD. No. DIR.B.C.II/ 13.01.08/98, 10.02.98 தேதியிட்ட கடிதத்தின்படி) ஆரம்பிக்கலாம்.

நகர்ப்புற சுய வேலைவாய்ப்பு / நகர்ப்புற பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்திட்டம் போன்றவைகளில் உள்ள மான்யம் கடன் தொகை திருப்பிச் செலுத்த வேண்டிய தொகைக்கு ஈடாக சரிசெய்து கொள்ளப்படும். கடன் பெற்றவரின் மானியக் கணக்கிலேயே அவரது மானியம் வரவு வைக்கப்பட்டிருக்கும், அவருடைய வைப்புத் தொகையாக

வங்கிக் கணக்கில் காட்டப்பட்டிருக்காது. அதே போன்று வங்கிக்கணக்கிலிருக்கும் மானியத்தொகைக்கு எந்தவிதமான வட்டியும் வழங்கப்படமாட்டாது.

திட்ட மதிப்புத் தொகையை வங்கிகள் கணக்கிடும்போது கடன், மானியம், கடன் மீதான வட்டி எவ்வளவு என்பது போன்ற விபரங்களைத் தெளிவாகக் கருத்தில் கொள்ள வேண்டும். சில நேரங்களில் பயனாளி, மானியம் பெறத் தகுதியில்லாதவராக இருந்தால் அம்மானியத்தொகையை வங்கி அரசுக்குத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்.

மானியத்தொகையைப் பொறுத்தவரையில் சுவர்ண ஜெயந்தி சஹாரி ரோஜ்கார் யோஜனா திட்டத்தின்கீழ் கடன்பெற்றவர் அதை முறையாகத் திருப்பிச் செலுத்தாமல் / வராக்கடனாக / சந்தேகக்கடனாக / நீண்ட காலம் தவணைத்தொகை திருப்பிச் செலுத்தாதபோது வங்கிக்கடனை முடிக்க வேண்டிய காலகட்டத்தில் இந்த மானியத்தொகையானது சரிசெய்யப்படும். அதாவது

- கடனானது உறுதியாக அல்லது சந்தேகமாக திரும்பி வராது, என்று வங்கியாளர் நினைக்கும்போது
- தலைமை / கட்டுப்பாட்டு அலுவலகத்தால் கூறப்பட்டிருக்கும் ஒழுங்கு முறைகளை கடன் வழங்கும்போதும் அதற்கு முன்பும் கடைப்பிடிக்கவேண்டும்.
- வங்கிக்கடனை தவறாகப் பயன்படுத்தக்கூடாது. அவ்வாறு ஏதேனும் நிகழ்ந்தால் வங்கியானது மானியத்தைக் கோரிப் பெறக்கூடாது அல்லது அரசுக்குத் திருப்பிச் செலுத்திவிட வேண்டும்.

**கவனித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்**

மாவட்ட அளவிலான கமிட்டியும், மாநில அளவிலான வங்கியாளர்களின் கமிட்டியும் இத்திட்டத்தை அவ்வப்போது கவனித்து மதிப்பீடு செய்யும்.

**கூட்டுறவு சிக்கன நாணய சங்கம் (Thrift Credit Groups)**

பெண்கள் குழுவாகச் சேர்ந்து தங்களுக்குள் கடனுதவியும் செய்து கொண்டால் அவர்கள் சுழற்சி நிதியாக ரூ. 20,000/- பெறத் தகுதியுடையவராகிறார்கள். அது ஒரு நபருக்கு ரூ. 1000 வீதம் பிரித்துக்கொடுக்கப்பட வேண்டும். இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி ரூ. 1264.41 லட்சம் ஆகும். தமிழ்நாட்டில் நகர்ப்புறங்களில் சுமார் 10,000-ம் குழுக்களுக்கும் மேல் வரை உள்ளன.

குழுக்கள் தங்களுடைய சேமிப்பிற்கு வட்டியை வருமானமாகப் பெறுகின்றனர். மேலும் தங்கள் உறுப்பினர்களுக்கு சேமிப்பைக் கடனாக வழங்குகின்றனர். இத்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட மொத்தக்கடன் ரூ. 3800.70 லட்சமாகும்.

**பயிற்சி**

இத்திட்டத்தின் பயிற்சிக்காக ரூ. 1129.85 லட்சம் ஒதுக்கப்பட்டு செலவிடப்பட்டது. 68345 பேர் பயிற்சி பெற்று பயனடைந்துள்ளார்.

**சமுதாயக் உள்கட்டமைப்பு (Community Structure Component)**

இத்திட்டத்தின்கீழ் 100 சதவிகிதம் பயனடைந்துள்ளார்கள் என்று கூறலாம். அதாவது குழந்தைகள் நலம், சத்துணவு, ஆரோக்கியம், பெண்கள் மற்றும் பெரியவர்களின் உடல்நிலை ஆகியவற்றை கவனத்தில் கொள்ளலாம். இன்னும் சில குறிப்பிட்ட விஷயங்களிலும் (பெண்கள் மற்றும் குழந்தைகள் சார்ந்த) அரசு கவனம் செலுத்த வேண்டும்.

**b) நகர்ப்புற கூலி வேலைவாய்ப்புத் திட்டம்**

நகர்ப்புறங்களில் வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் தொழிலாளர்கள் அநேகமாக முறைப்படுத்தப்படாத, தனியார் நிறுவனங்களில் வேலை செய்கின்றனர் அல்லது வேலையே செய்யாது இருக்கின்றனர். இவர்கள் தீய பழக்கவழக்கங்களிலும், சட்டத்திற்குப்புறம்பானது செயல்களிலும் ஈடுபடுகின்றனர்.

எனவே இத்திட்டமானது நகர்ப்புறங்களில் வறுமைக்கோட்டிற்குக்கீழ் இருப்பவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதாக அமையும். இத்திட்டத்தின் செயல்பாடுகள் மூலம் வறுமைக்கோட்டிற்குக்கீழ் இருப்பவர்களின் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் பெருக்குகின்றன. உதாரணமாக, சாலை, கழிவுநீர் சாக்கடைகள் இன்னபிற. இதற்காக மொத்தமாக ஒதுக்கப்பட்ட நிதி ரூ. 5410.57 லட்சமாகும். அதில் ரூ. 4993.29 லட்சம் இதுவரை செலவிடப்பட்டுள்ளது.

அதாவது இதன்மூலம் செலவிடப்படும் தொகையானது கட்டமைப்பு வசதிகளைப் பெருக்குவதற்காக மட்டுமே செலவிடப்படவேண்டும். அதன்மூலமாக வேலைவாய்ப்பு வழங்கப்படும்.

## 2, தொழில் முனைதல்

தொழில் முனைதல் என்பது இடர் ஏற்பு, புதிய உத்திகளை கண்டறிதல் மற்றும் கிடைக்கின்ற வளங்களை ஒருங்கிணைத்தல் போன்றவற்றைக் குறிக்கும்.

வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளில் தொழில்மயமாதல் மற்றும் பொருளாதார மேம்பாட்டின் காரணமாக தொழில் முனைப்பு மற்றும் தொழில் முனைவோருக்கு சமீப காலமாகத்தான் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

பேரறிஞர் ஹக்கின்ஸ், தொழில் முனைப்பிற்கு கீழ்க்கண்டவாறு விளக்கமளிக்கிறார். அதாவது முதலீடுகளை சேகரித்தல், உற்பத்திக்கான சந்தர்ப்பங்களைக் கண்டறிந்து, ஒரு நிறுவனமானது புதிய உற்பத்தி முதலீடு, வேலையாட்கள், மூலதனப் பொருட்கள், தொழில் தொடங்க வேண்டிய இடம், புதிய உத்திகள் மற்றும் பொருட்கள், புதிய மூலதனப் பொருட்கள் போன்றவற்றுடன் சிறந்த மேலாளரைக் கொண்டு தினப்படி நடவடிக்கைகளை லாபகரமாக நடத்துவதே தொழில் முனைதல் என்கிறார்.

**கண்டுபிடிப்பு என்பது**

- புதிய பொருளை சந்தைப்படுத்துதல்
- புதிய உற்பத்தி முறைகள்
- புதிய சந்தையில் பொருட்களை விற்றல்
- புதிய மூலப்பொருட்களை கண்டறிதல்

**புதிய நிறுவனத்தை அமைத்தல்**

தொழில் முனைவோர் என்பவர் ஒரு முகவரே, இவர் ஏதேனும் ஒரு விலையில் சிலவற்றை வாங்கி, அவற்றை பொருட்களாக மாற்றி வேறு ஒரு லாபகரமான விலைக்கு விற்பவர் என்கிறார்

**தொழில் முனைவோரின் பணிகள்**

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி என்பது மூன்று முக்கிய காரணிகளைப் பொறுத்தே அமையும். அவை மனிதவளம், பொருள்வளம் மற்றும் பணம். பொருளையும் பணத்தையும், மனிதன் எவ்வாறு கையாள்கிறான் என்பதைப் பொறுத்தே பொருளதார மேம்பாடு இருக்கும். ஒரு நாட்டில் இயற்கை வளம் மிகையாக இருக்கலாம் ஆனால் தனிமனித வருமானத்தில் அது மிகவும் பின்தங்கி இருக்கும். அதற்கு முக்கியக் காரணம் அந்நாட்டு மக்களுக்கு அந்த வளங்களை முறையாக உபயோகித்துத் தொழில் செய்யத் தெரியாது தான்.

தொழில் முனைவோர்கள் ஒரு நாட்டின் பொருளாதார வளத்தை கீழ்க்கண்ட முறைகளில் மேம்படுத்துகின்றனர்.

**மூலதனத்தை அதிகப்படுத்துதல் / உருவாக்குதல்**

மக்களிடம் உள்ள பணத்தை நிறுவனப் பங்குகளாக, பத்திரங்களாக மாற்றுவதன் மூலம் உபயோகிக்கப்படாமல் இருக்கும் பணம் நிறுவனங்களில் மூலதனமாகச் சேரும்போது அது உற்பத்தியைப் பெருக்குகின்றது. இதன்மூலம் நிறுவனங்களின் லாபமும் பெருகும், தனிமனிதர்கள் பங்குச்சந்தையில் முதலீடு செய்வதன் மூலம் அவர்களின் வருமானமும் கூடும்.

**தனிமனித வருமான உயர்வு**

நாட்டில் உள்ள அனைத்து வளங்களும் குறிப்பாக நிலம், நீர், மூலதனம், மனிதவளம் அனைத்தும் முறையாகவும், முழுமையாகவும் உபயோகப்படுத்தப்பட்டால், தனிமனித வருமானம் அவசியம் பெருகும். வளங்களை உபயோகித்து நாட்டின் அனைத்து இடங்களிலும் (கிராமப்புறங்களிலும்) தொழிற்சாலைகள் அமையும்போது, அங்குள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கின்றது. அதன் மூலம் தனிமனித வருமானம் பெருகுகின்றது.

**வேலைவாய்ப்பு**

முன்பே கூறியது போல தொழில் நிறுவனங்கள் பெருகும்போது வேலை வாய்ப்புகளும் அந்தந்த இடங்களில் பெருகுவதற்கு மிகுந்த வாய்ப்புகள் உண்டாகும்.

**வட்டார மேம்பாடு**

மத்திய மற்றும் மாநில அரசு, கிராமங்களில் சுயதொழில் தொடங்கும் தொழில் முனைவோருக்கு, பலவிதமான சிறப்புச் சலுகைகளை வழங்குகின்றது. அதன்மூலம் நாட்டில் சமநிலை பொருளாதார மேம்பாடு காண வழிவகை செய்கின்றது.

**வாழ்க்கைத்தர மேம்பாடு**

வேலை வாய்ப்பினால் ஒவ்வொரு தனிமனிதனின் வருமானமும் பெருகும், இதன்மூலம் அவர்கள் வாழ்க்கைத் தரமும் உயரும். மிகுந்த அளவில் பொருட்கள் உற்பத்தியாவதால் குறைந்த விலையிலேயே சந்தையில் கிடைக்க ஏதுவாகும்.

**பொருளாதார தனித்துவம்**

வேலைவாய்ப்பு பெருகும் நிலையில் யாரும், யாரையும் பணத்திற்காக சார்ந்து இருக்க வேண்டிய அவசியமில்லை. மேலும், ஒரு பொருளுக்கு, மாற்றுப் பொருளை அதே தரத்துடன்

உற்பத்தி செய்யும்போது நாம் அப்பொருளை இறக்குமதி செய்ய வேண்டிய தேவையில்லை. இதன்மூலம் அந்நிய நாடுகளை நாம் சார்ந்து இருக்க வேண்டிய அவசியமில்லை. மேலும் நல்ல தரமான பொருட்களை உற்பத்தி செய்வதன்மூலம் அவற்றை ஏற்றுமதி செய்து நம் நாட்டின் அந்நிய செலாவணியை பெருக்கிக் கொள்வதன் மூலம் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைவதுடன், தனித்திருக்கவும் இயலும்.

**தொழிற்சாலைகள் அமைதல்**

ஓர் இடத்தில் மிகப்பெரிய தொழிற்சாலை ஒன்றை அமைப்போமேயானால் அதன் தொடர்புடைய சிறுசிறு தொழிற்சாலைகளும் அமையும். எனவே அந்த இடத்தில் தொழில் வளம் பெருகுவதற்கு சந்தர்ப்பங்கள் அதிகமாகும். அத்துடன் மிகப்பெரிய தொழிற்சாலைகள் அமையும்போது அங்கு தேவைகளும் பெருகும். எனவே அங்கே பள்ளிக்கூடம், மருத்துவமனை, சிறுசிறு கடைகள், மற்றவைகள் என்று நகர்ப்புற வசதிகள் கிடைப்பதற்கான சாத்தியக்கூறுகள் அமையும்.

**தொழில் முனைப்பின் முக்கியத்துவம்**

நாட்டின் அரசியல், சமூக, பொருளாதார நிலையைப் பொறுத்தே தொழில் செய்வதற்கான சூழ்நிலை அமையும். ஆரோக்கியமான சூழல் என்பது, தொழில் தொடங்குவதற்கு அனைத்து சூழல்களும் இசைவாக இருத்தல். ஏனெனில் தொழிலும், நாட்டின் சூழ்நிலையும் ஒன்றை ஒன்று சார்ந்து உள்ளது. எனவே, இவையே ஒரு தொழிலின் வெற்றி, தோல்வியை நிர்ணயிக்கின்றது. தொழில் செய்பவர்கள், அரசியல், சமூக, பொருளாதார சூழ்நிலைகளை தங்களுக்கு ஏதுவாக அமைத்துக் கொள்ளத் தெரிந்தவராக இருந்தால்தான், தொழிலில் வெற்றி பெறமுடியும். வெற்றிகரமான தொழில் அதிபர்களால் நாட்டின் சமூக, பொருளாதாரத்தில் நல்ல மாற்றங்களைக் கொண்டுவர இயலும்.

**தொழில் தொடங்குவதற்கான சூழல்பற்றி அறிந்து கொண்டால் கிடைக்கும் நன்மைகள்**

- என்ன தொழிலை வெற்றிகரமாகச் செய்யலாம் என்பதைப்பற்றி முழுமையான செய்திகள்
- சூழ்நிலை சாதகமாக இருப்பதாக அறிந்தால் தொழில் முனைவோர்கள் புதிய திட்டங்களுடனும், தொழில்களுடன் அவற்றை செயலாக்க முனைவர்.
- சூழ்நிலைகளின் மாற்றங்களை அறிந்து அதற்கேற்ப தொழிலிலும் மாற்றங்களை செய்து கொண்டிருப்பதன் மூலம் எப்போதும் வெற்றிகரமான தொழில்முனைவோராக விளங்க இயலும்.

- சூழ்நிலையின் சாதக பாதகங்களை அறிந்து கொள்வதன்மூலம் தொழிலின் வளர்ச்சிக்கு அதனை பயன்படுத்திக் கொள்வதன்மூலம் தொழிலுக்கான ஆதரவையும் பெற இயலும்.

**தொழில் முனைப்பிற்கான சுழ்நிலைகள்**

தொழில் செய்வதற்கான சூழ்நிலைகள் 4 வகைகளாகப் பிரிக்கலாம். அவையாவன. (1) பொருளாதார சூழ்நிலை (2) சட்ட சூழ்நிலை (3) அரசியல் சூழ்நிலை (4) சமூக-கலாசாரச் சூழ்நிலை ஆகும்.

**1. பொருளாதார சூழ்நிலை**

பொருளாதார சூழ்நிலை என்பது ஒரு நாட்டின் பொருளாதார கட்டமைப்பு, தொழில், விவசாயம், வணிகம், போக்குவரத்து, நாட்டின் தொழிற் கொள்கை, நாட்டின் வருமானம், தொழில், விவசாயம், மற்றும் அனைத்துத் துறைகளுக்கும் பகிர்ந்தளிக்கப்படும் விதம், மற்றும் பொருளாதாரம் சார்ந்த இன்றைய நடவடிக்கைகளை உள்ளடக்கியதாகும்.

பொருளாதார சூழலுக்கும், தொழிலுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. பொருளாதார வளர்ச்சியைப் பொருத்தே தொழில்களும் வெற்றியடையும். கடந்த சில பத்துஆண்டுகளில் நாட்டின் தொழிலில் பல்வேறு விதமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. உலகளாவிய பொருளாதாரமயம், உலகசந்தை, தனியார்மயம், நன்றாகப்படித்த அனுபவ அறிவுள்ளவர்கள் தொழிலில் மேலாண்மை செய்தல் போன்றவை சிறந்த மாற்றங்களை தொழில் உலகில் செய்துள்ளது.

மேலும் ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் தனியார் மற்றும் பொதுவுடைமைத் தொழில்கள் முக்கியப்பங்கு வகிக்கின்றது. தனியார் தொழிலின் வெற்றி, அவர்கள் எவ்வளவு லாபம் ஈட்டுகின்றார் என்பதைப் பொறுத்தே அமைகின்றது. அவர்களின் முக்கிய நோக்கு, சமூக நலன் மறும் சமூகப் பொறுப்புடன் செயல்பட்டு மக்களுக்கு நன்மை பயப்பதாக அமைய வேண்டும்.

நம் இந்தியாவில் தனியார் மற்றும் பொதுவுடைமை தொழில் நிறுவனங்கள் இரண்டும் லாபம் மற்றும் நன்மையை கவனத்தில் கொண்டு செயல்படுகின்றன. ஒவ்வொரு மாநிலத்திலும் வகுக்கப்பட்டுள்ள தொழிற்கொள்கையை முக்கியமாகக் கருத்தில் கொண்டு தனியார் தொழில் நிறுவனங்கள் செயல்படும். தனியார் மற்றும் பொது நிறுவனங்கள் சமூகப் பொறுப்பையும், நலனையும் முதல் குறிக்கோளாகவும், லாபத்தை இரண்டாவது குறிக்கோளாகக் கொண்டு இணைந்த செயல்படுமாயின், அது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு நன்மை பயப்பதாக இருக்கும்.

### 2. சட்டச் சூழ்நிலை

இந்தியாவில் யார் எந்தத் தொழிலைத் துவங்கினாலும், அது சட்ட வரையரைகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். நிறுவனங்கள், அந்நிய முதலீடுகள், அந்நிய நிறுவனங்களுடன் சேர்ந்து தொழில் செய்தல், தொழிலாளர் மேலாண்மை, நிறுவனப்பிரச்சனைகள், சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக நலன் ஆகியவற்றைக்கருத்தில் கொண்டே கம்பெனிச் சட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. ஆகையால், இதைப்பற்றிய ஆழ்ந்த அறிவு ஒவ்வொரு நிறுவனத்தை ஆரம்பிப்பவருக்கும், நடத்துபவருக்கும் இருக்கவேண்டும். ஏனென்றால் சில சட்டங்கள் மாநிலத்திற்கு, மாநிலம் வேறுபடும். இதனை அறிந்திருப்பதன் மூலம் அநாவசியமான பிரச்சனைகளைத் தவிர்க்க இயலும்.

### 3. சமூக கலாசார சூழ்நிலை

ஒவ்வொருவரின் வளர்ச்சியையும் பாதிக்காத வகையில் ஒரு நாட்டின் கலாச்சாரம் பாதுகாக்கப்படவேண்டும். வளர்ச்சி பெறாத நாடுகளில், ஒவ்வொருவரின் வெற்றிக்கும், தோல்விக்கும் கடவுளே பொறுப்பு என்று இன்றும் நம்புகின்றனர். கலாச்சாரத்தின்படி சில தொழில்களை குறிப்பிட்ட சாதியினர் மட்டுமே செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். சில தொழில்களை செய்ய அனுமதிக்கப்படுவதில்லை. சில நேரங்களில் நல்ல நாட்களில் தொழில் ஆரம்பிக்க வேண்டும் என்று மாதக்கணக்கில் காத்திருப்பதால் உற்பத்தி ஆரம்பிக்கப்படாமல், வட்டியானது அதிகரித்துக்கொண்டே செல்லும். மேற்கூறிய இவை அனைத்தும் உழைப்புச் சுரண்டலுக்கும், உழைப்பை வீணாக்கவுமே காரணமாகின்றது.

இன்றைய உலகில் ஒவ்வொரு தொழிலாளியும் தான் மதிக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறான். வேலைசெய்யும்இடமும் ஆரோக்கியமானதாகவும், தொழில் நுட்பமும் இருக்கவேண்டும் என்று விரும்புகிறான். அப்படிப்பட்ட இடத்தில்தான் தொழில் முனைவோர்களின் எண்ணிக்கை பெருகும். அதைவிடுத்து கலாச்சாரம் - பண்பாடு என்று கூறி தனி மனிதனின் வளர்ச்சியை தடை செய்தால் அது தொழில் வளர்ச்சியை முற்றிலுமாகப் பாதிக்கும்.

வெளியே இருக்கும் சூழ்நிலையானது மாறிக் கொண்டே இருக்கும். இது ஒவ்வொரு நிறுவனத்தையும் ஒவ்வொரு விதமாக பாதிக்கும். சில சூழ்நிலைமாற்றங்கள் வெளிப்படையாக அனைத்துத் தொழில்களையும் பாதிக்கும். அவை,

- அரசு கொள்கையில் திடீர் மாற்றம்
- திடீர் ஆட்சி மாற்றம்
- போர் மற்றும் உள்நாட்டுக் கலவரங்கள்
- அரசியல் ஸ்திரத்தன்மை இல்லாமை

- அரசு தொழில் வளர்ச்சியில் அக்கறை காட்டாத போது
- சட்டத்தின் பிடி இறுகும்போது
- சமூகப் பிரச்சனைகள் எழும்போது
- மின்சாரம், எரிபொருள், மூலப்பொருள், மூலதனம், தொழிலாளி ஆகியவர்கள் பற்றி உறுதி கூற இயலாத நிலையின்போது
- உற்பத்திச் செலவு அதிகரிக்கும்போது
- சந்தை நிலவரம் சரியில்லாதபோது
- வங்கி மற்றும் இதர நிதிநிறுவனங்கள் சரியான ஒத்துழைப்புக் கொடுக்காதபோது.

ஆகவே, தொழிலதிபர்கள் சூழ்நிலைகளை மிகவும் அனுசரித்துச் செல்ல வேண்டியவர்கள். ஏனென்றால் சாதகமான சூழ்நிலையில் மட்டுமே ஒருவர் வெற்றிகரமாகத் தொழில் செய்ய இயலும். தொழில் செய்வதற்குச் சாதகமான சூழ்நிலை என்னவென்றால், மக்களின் ஆதரவு (சமூகமும், கலாசாரமும் அங்கீகரிக்கவேண்டும்), பொருளாதாரநிலை, அரசுக்கொள்கைகள் உதவிகரமானதாக இருத்தல் போன்றவையே.

### 3. அரசியல் சூழ்நிலை

நிறுவன மேலாளர்களும், தொழில் முனைவோர்களும் நாட்டின் அரசியல் நிலவரத்தை நன்கு அறிந்திருக்கவேண்டும். ஏனெனில் ஜனநாயக நாட்டில் அரசியலை ஒதுக்கித் தள்ளுவது, தொழில் செய்பவர்களால் இயலாது. இன்றைய பொது மக்களின் கருத்துக்களே நாளைய சட்டங்களாகவும் வாய்ப்புகள் உள்ளது. எனவே வெற்றிகரமான தொழில் முனைவோராக விரும்புவோர் பொதுமக்களின் கருத்துக்களை அறிந்திருத்தல் வேண்டும்.

ஒரு தொழில் சிறப்பாக உயரவேண்டுமென்றால் அந்த மாநில அரசின் ஆதரவு மிகவும் தேவை. அதேபோல் சில நேரங்களில் தொழில் முனைவோர்கள் அரசியலையும், அரசையும் நிர்ணயிக்கும் சக்தியாக மாறிவிடுகின்றனர். எனவே தொழில் செய்பவர்கள் அரசு நிறுவனங்கள் பற்றியும், அரசு பற்றியும் அறிந்திருத்தல் அவசியம்.

முன்பெல்லாம் தொழில் செய்பவர்கள் எந்த ஒரு அரசியல் கட்சியுடனும் தொடர்பில்லாமல், தங்கள் தொழிலை தாங்களே செய்து வந்தனர். ஆனால் இன்று ஒவ்வொரு தொழில் அதிபரும் அரசியலில் நடவடிக்கையில் மிக்க கவனமுடன் இருக்கின்றனர். தங்கள் அமைப்பைச் சேர்ந்தவர்களை அரசின் ஒவ்வொரு அமைப்பிலும் உறுப்பினராக்குவதன் மூலம் கொள்கை முடிவுகளையும் எடுப்பதில் பங்கேற்கின்றனர்.

## 3. தொழில் மயமாதலும், பொருளாதார மேம்பாடும்

இந்தியாவைப்போல் வளர்ந்து கொண்டிருக்கும் நாடுகளின் பொருளாதார மேம்பாட்டிற்கு தொழில் மயமாதலே அந்நாட்டின் பொருளாதார நிலையை மேம்படுத்தும். தொழில் மயமாவதன் மூலம், தனிநபர் வருமானம் பெருகும், மூலதனம் கூடும் மற்றும் வேலைவாய்ப்பும் பெருகுவதற்கு மிகுந்த வாய்ப்பு உண்டு. பொருளாதார மேம்பாட்டிற்கு தொழில் மயமாதல் காரணமாக அமைகின்றது.

- தொழிற்சாலைகளின் எண்ணிக்கை அதிகமாகும்போது, விவசாயப்பொருட்களின் தேவையும் அதிகரிக்கின்றது. தொழிற்சாலைகள் இல்லாதபோது இந்த விவசாயப் பொருட்கள் உபயோகமற்று வீணாகிப்போகின்றது. நம்நாடு விவசாயம் சார்ந்த நாடாக இருப்பதால், விவசாயம் தொடர்பான தொழிற்சாலைகள் தொடங்கும்போது உற்பத்தியான விளை பொருட்களும் முறையாகப் பயன்படுத்தப்பட்டு தொழில்வளம் காண வகை செய்கின்றது.

- சேமிப்பும், மூலதனமும் தொழில்துறையைவிட, விவசாயத்தில் அதிகம் காணப்படுகின்றது. தொழில்வளர்ச்சியால், பொருளாதார மேம்பாடு என்பது உலக அளவில் காணப்படுகின்றது.

- சமீப நாட்களில் விவசாயம் என்பது தொழிற்சாலைகளைச் சார்ந்தே இருக்கின்றது. ஏனெனில் உரம், பூச்சிமருந்து, இயந்திரங்கள் என்று விவசாயம் இன்று தொழிற்சாலைகளை எதிர்பார்த்து நிற்கின்றது. விவசாயத்திலும் தொழிற்புரட்சியை நாம் காண முடிகின்றது.

- அதே நேரத்தில் தொழிற்சாலைகளானது விவசாயத்தைப் போன்று இயற்கையின் மாறுதல்களுக்கு நேரடியாக உட்படாதது. தேவைக்கேற்ப, என்ன பொருள் தேவையோ அதை உற்பத்தி செய்வதற்கு தொழிற்சாலைகள் தங்களை தயார் செய்து கொள்ளவும் இயலும், வெள்ளம், பஞ்சம் போன்ற எவையும் நேரடியாக தொழிற்சாலைகளை பாதிக்காது.

- அத்தியாவசியப் பொருட்களுக்கான தேவை அதிகமாகவும், எப்பொழுதும் இருந்து கொண்டே இருக்கும். உதாரணமாக விவசாயம் சார்ந்த உணவுப் பொருட்களுக்கான தேவை அதிகரித்துக்கொண்டேதான் இருக்கின்றது. எனவே வளர்ந்து வரும் நாடு அத்தியாவசியப் பொருட்களின் உற்பத்தியில் கவனத்தைச் செலுத்தினால் அதிகமான லாபம் சம்பாதிக்க இயலும்.

- இத்தனை உண்மைகளும், நன்மைகளும் இருந்தாலும் கூட தொழிற்சாலைகள், விவசாயத்தைவிட மற்ற துறைகளை மிகவும் நம்பி இருக்கின்றது. அதாவது மின்சாரம், இயற்கை வளங்கள், கட்டுமானம், போக்குவரத்து, தொலைதொடர்பு பொருட்களை சந்தைப்படுத்த இயலுகின்றது.

- சமூக மேம்பாட்டிற்கும் தொழில்மயமாவது அவசியம். ஏனென்றால், வேலைவாய்ப்பு பெருகி ஒவ்வொரு தனிமனிதனின் வருமானமும் பெருகுகின்றது. இதன் மூலம் அரசுக்கு ஒவ்வொரு தனிமனிதனின் வருமானமும் பெருகுவதால் இதன் மூலம் அரசுக்கு வரி என்ற பெயரில் வருமானமும் கிடைக்கின்றது. அந்த வரியே மீண்டும், கல்வி, பொது சுகாதாரம், பொழுதுபோக்கு மற்றும் வேறு பல நலத்திட்டங்களாக அரசால் அறிவிக்கப்பட்டு மக்களைச் சென்று அடைக்கின்றது.

**பெண் தொழில் முனைவோர் : சமூக, பொருளாதார மற்றும் உளவியல் காரணங்கள்**

பொருளாதார மேம்பாடு என்பதே சமூகத்தின் முக்கியக் குறிக்கோளாகும். ஒரு நாட்டின் அனைத்து வளங்களும் முறையாக உபயோகிக்கப்பட்டால், அந்நாடு விரைவில் பொருளாதாரத்தில் மேம்பாடு அடையும். எனவே, மக்கள் தொகையில் சரிபாதியாகவும், மாபெரும் மனிதவளமாக விளங்கக்கூடிய பெண்களின் பங்கும் மிகவும் முக்கயமானதாக கருதவேண்டும். பெண்களின் சமூக, பண்பாட்டு தளங்களில் மட்டும் இல்லாமல் பெண்களின் அறிவும், உழைப்பும் கவனத்தில் கொள்ளப்படவேண்டும். அனைத்துத் துறைகளிலும், ஆண்களுக்கு நிகராக பெண்களும் உழைக்க வேண்டும். ஆனால் சில காரணிகள் பெண்களை தொழில் முனைவோர்களாக விடாமல் தடுக்கின்றது அவையாவன,

வேலைவாய்ப்பு என்று கருத்தில் கொண்டால் 3ல் ஒரு பங்கு பெண்களே உள்ளனர். இதற்கான முக்கிய காரணம் கலாசாரம், பண்பாடு என்று கூறிக் கொண்டு, காலத்திற்கு ஏற்ற கல்வியைக் கொடுக்காமல், ஏதோ ஒன்றை படிக்கச் சொல்வதும், இளவயதிலேயே திருமணத்தை செய்து வைப்பதும், பண்பாட்டின் பெயரில் தனி உலகிலேயே பெண்களை வைத்திருப்பதால், தன்னம்பிக்கை இழந்து, எதிர்காலத்தில் என்ன வசதிகள், வாய்ப்புகள் இருக்கின்றது என்பது கூட அறியாதவர்களாக உள்ளனர்.

ஒவ்வொரு மனிதனும் தான் புதிதாக ஒரு வேலையை ஆரம்பிக்கும் முன் தனக்கு மிகவும் நெருங்கிய உறவினர்கள் மற்றும் நண்பர்களிடம் கலந்து ஆலோசிப்பார். அது குடும்பம், நண்பர், பக்கத்து வீட்டுக்காரர் மற்றும் அவருடன் பணிபுரிபவராகக்கூட இருக்கலாம். இவர்களின் எண்ணங்களின் தொழில் தொடங்க ஊக்குவிப்பதாகவும் இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம். அது அவரவர்க்குக் கிடைத்த அனுபவத்தைப் பொறுத்தே அமைகின்றது.

மேலும் கூட்டுக்குடும்ப முறையில் குடும்பத் தலைவரிடம் கேட்டே அனைத்து விஷயங்களுக்கும் முடிவுகள் எடுக்கப்பட வேண்டியதாயிருக்கின்றது. பெண்கள் சுதந்திரமாக முடிவு எடுப்பதற்குக் கூட்டுக் குடும்ப முறைகள் அனுமதிப்பதில்லை. பெண்கள் மீது அவர்கள் குடும்பத்தினருக்கே தன்னம்பிக்கை இல்லாததுதான் முக்கியக் காரணமாகும். மேலும், பெண்களின் வயது, குடும்பம், அவர்கள் பார்க்கும் வேலை, வருமானம் மற்றும் அவர்களின் குணநலன்கள் அனைத்தும் கவனத்தில் கொள்ளப்பட்டு அதன்பின்பே தொழில் தொடங்க

அனுமதிக்கப்படுகின்றனர் முக்கியமாக பொருளாதார நிலையையே கணக்கில் கொள்ளப்படுகின்றது.

அடுத்ததாகக் கல்வியும், தொழில் செய்வதற்கு முக்கியமாகக் கவனத்தில் கொள்ளப்படுகின்றது. செயல்முறையில் கல்வி கற்காதவர்களும் தொழிலில் வெற்றி பெற்றாலும், கல்வியின் பயனாக தொழிலை திறம்பட நடத்திட இயலும். ஆனால் புதுமையான கல்வியோ, பயிற்சியோ பெண்களுக்கு வழங்கப்படுவதில்லை.

**உளவியல் காரணங்கள்**

உளவியல் காரணங்கள் மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். அவை

- ஊக்கப்படுத்துதல்
- நினைப்புகள்
- கற்றுக்கொள்ளுதல்

ஒவ்வொரு மனிதருக்குள்ளும் ஒரு தாகம் (அ) செயல்வெறி ஆர்வம் ஓடிக்கொண்டே இருக்கும். அதுதான் அவர்வெற்றிகரமான மனிதராக மாறுவதற்குக் காரணமாக அமைகின்றது. அந்த எண்ணங்கள் அவர் அறியாமலே அவருடைய ஆழ்மனதில் பதிந்திருக்கும். அவற்றை அடையாளம் கண்டு ஊக்கப்படுத்துவோமேயானால் வெற்றிகரமான பெண் தொழில் முனைவோர்களை நாம் காணலாம்.

ஒரு குறிப்பிட்ட நிகழ்வைப்பற்றி ஒரு நபர் என்ன நினைக்கிறார். அது சாதகமாகவும் இருக்கலாம், பாதகமாகவும் இருக்கலாம். அவருடைய அந்த நினைப்புகளே, சந்தர்ப்பங்களை அவருக்குச் சாதகமாகக் காரணமாகிறது. சந்தர்ப்பங்கள் சாதகமாகும்போது எப்படிப்பட்ட தொழிலும் பெண்கள் வெற்றி பெற்று விடலாம். எனவே ஆரோக்கியமான சிந்தனை, பகுந்தறிந்து எதையும் பார்க்கும் தன்மையை பெண்களிடம் வளர்க்க வேண்டும்.

ஒவ்வொரு முறையும் கற்றுக் கொள்வதன் மூலம் அது மனதிற்கு பலமாகவும் இருக்கும், மக்கள் தங்கள் நம்பிக்கையையும், எண்ணங்களையும் வலுப்படுத்திக் கொள்கின்றனர். ஒவ்வொருவரின் நம்பிக்கைதான் அவர்கள் தேர்ந்தெடுக்கும் தொழிலுக்கு முக்கியக் காரணியாக அமைகின்றது.

எனவே, பெண்களிடம் திறன் உள்ளது என்று எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. ஆனால் மேற்குறிப்பிட்ட காரணங்களால் பெண்கள் சற்று தயக்கம் காட்டுகின்றனர் எனவே, அவர்களுக்கு முறையான பயிற்சி அளிப்பதன் மூலம் நாட்டின் மேம்பாட்டிற்கு முழுமையாக பெண்களின் உழைப்பையும் பயன்படுத்தலாம்.

### வெற்றிகரமான தொழில் முனைவோருக்கான உளவியல் காரணிகள்

- தன்னம்பிக்கை
- உயர்ந்த எதிர்ப்பார்ப்புகள் மற்றும் கற்றலில் ஆர்வம்
- பிரச்சனைகளை சந்திக்கும் திறன்
- கடின உழைப்புக்குத் தயாராக இருத்தல்
- புதிதாக யோசித்தல்
- சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப தன்னை மாற்றிக்கொள்ளுதல்
- திறமையான விற்பனையாளராக இருத்தல்
- அதிகமான நல்ல நண்பர்களைக் கொண்டிருத்தல் அதன் மூலம் பிரச்சனைகளைச் சமாளித்தல்
- நெஞ்சுறுதி
- சாதுர்யமாக நடந்த கொள்ளுதல்
- மிகத்திறமையாக வேலை செய்தல்
- பொறுப்புடன் நடந்து கொள்ளுதல்
- வெற்றியில் உறுதியாக இருத்தல்
- நாணயமாக நடந்து கொள்ளுதல்

### தொழில் முனைப்பைப் பெருக்கும் பொதுவான காரணிகள்

- சிறந்த கல்வி அறிவு
- தொழில் அனுபவம்
- தனியாக தொழில் செய்வதில் ஆர்வம்
- உற்பத்தி செய்வதில் விருப்பம்
- குடும்ப சூழ்நிலை
- நிதிநிறுவனங்களின் உதவி
- தொழில் நுட்பம் மற்றும் மூலப்பொருட்கள் கிடைத்தல்
- பொருட்களுக்கான தேவை

எவர் ஒருவரும் பிறப்பால் தொழில் முனைவோர் ஆவதில்லை. சந்தர்ப்பங்களும், சூழ்நிலைகளும் ஒவ்வொருவரையும் பணம் சம்பாதிப்பதற்காக ஏதேனும் ஒரு துறையைத் தேர்ந்தெடுக்கச் செய்கிறது. அவ்வாறே தொழில் முனைவோர்களும் உருவாக்கப்படுகிறார்களே தவிர பிறப்பதில்லை.

**தொழில் முனைப்பின் முக்கிய காரணிகளாக கீழ்க்கண்டவற்றை சர்மா அவர்கள் கூறுகிறார்கள்**

- கல்வித்தகுதி
- தொழில் அனுபவம்
- உற்பத்தித் துறையில் சுயமாக வேலை செய்ய விருப்பம்
- குடும்பச் சூழ்நிலை
- அரசாங்க உதவி
- நிதி நிறுவனங்களின் உதவி
- தொழில் நுட்ப அறிவு
- மூலப்பொருட்களின் அறிவு
- குறிப்பிட்ட பொருளுக்கான தேவை இன்ன பிற காரணிகளும் அமையுமாயின் ஒரு மனிதன் தொழில் துவங்க முன்வருகிறான்.

மேற்குறிப்பிட்ட காரணிகள் இரு வகையாகப் பிரிக்கப்படும். அவையாவன

1. உட்காரணிகள் 2. வெளிக்காரணிகள்

**1. உட்காரணிகள்**

கல்வி, தொழில் அனுபவம், குடும்ப சூழ்நிலை, சுயமாக தொழில் செய்ய விருப்பம், தொழில் முனைவோராக விருப்பம் ஆகியன மற்றவை வெளிக்காரணிகளாக அமைகின்றன.

**தொழில் முனைவோரின் உட்காரணிகள் :**

- தன்னம்பிக்கை
- பிரச்சனைகளை சந்திக்கும் மனப்பாங்கு
- உயர்ந்த கொள்கை
- கடுமையான உழைப்பு

- கற்றுக்கொள்வதில் ஆர்வம்
- புதிது, புதிதாக யோசித்தல்
- ஒத்துப்போகுதல் / இணங்கி நடத்தல்
- விற்பனைத் திறன்
- ஆர்வம்
- அதிக நண்பர்களை சம்பாதிக்கும் திறன்
- பொறுப்பு
- மன உறுதி
- வெற்றி கொள்வதில் உறுதி
- மற்றவர்களை கவர்ந்திழுக்கும் பேச்சுத்திறன்
- உண்மையாக இருத்தல்
- வேலையைச் சிறப்பாகச் செய்தல்
- காலம் கருதி வேலை செய்தல்

## தொழில் முனைவோர் சந்திக்கும் பிரச்சனைகள்

ஒவ்வொரு தொழில் முனைவோரும் தொழில் துவங்கும் முன்பும் அதன் பின்பும் பல்வேறு விதமான பிரச்சனைகளை சந்தித்துக்கொண்டே இருக்கின்றனர். அவை

### பணப் பற்றாக்குறை

சிறிய மற்றும் குறுந்தொழில் முனைவோர்கள் எப்போதும் நிலையான மூலதனத்திற்கும், நடைமுறை முதலுக்கும் பணப்பற்றாக்குறையைச் சந்தித்துக் கொண்டே இருப்பர். இவர்களுக்கு வெளியிலிருந்து முதலீடு கிடைப்பது மிகவும் அரிது. ஏனென்றால் இவர்களிடம் மாற்றுக் கொடுப்பதற்கு எந்தவிதமான பண மதிப்புள்ள பொருட்களும் இருப்பதில்லை. எனவே, இவர்கள் மீதுள்ள நம்பிக்கையில்லா தன்மையால் வெளிநபர்கள் பணத்தை கடனாகக் கொடுப்பதற்கு அஞ்சுகின்றனர். வங்கியில் கடன் பெறுவதற்காகச் செயல்படுத்தப்படும் நடைமுறைகள் மிகுந்த கால தாமத்தை ஏற்படுத்துகிறது. இதனால் சிறிய தொழில் முனைவோர்கள் நடைமுறை முதலுக்கு ஒவ்வொரு நாளும் சிரமப்படுகின்றனர்

### விற்பனையும் சந்தைப்படுத்துதலும்

சிறிய மற்றும் குறுந்தொழில் முனைவோர்கள் தங்கள் பொருட்களை சந்தைப் படுத்துவதற்கும், விற்பனை செய்வதற்கும் இடைத் தரகர்களையே நம்பியிருக்க வேண்டியுள்ளது. அவர்கள் கணிசமான இலாபத்தை எடுத்துக் கொள்ளுகின்றனர். ஆனால் அதே சமயம் இந்த இடைத் தரகர்களை தவிர்ப்பதென்பதும் இயலாது. ஏனென்றால், ஒவ்வொரு இடத்திற்கும் உற்பத்தியையும் கவனித்துக் கொண்டு விற்பனைக்கு அலைவதென்பது ஒருவரால் இயலாத காரியம். மேலும், குறுந்தொழில் முனைவோர்கள் தங்கள் பொருட்கள் மக்களிடையே அறிமுகப்படுத்துவதற்கு மிகவும் சிரமப்பட வேண்டியுள்ளது.

### மூலப்பொருள் பற்றாக்குறை

குறுந்தொழில் முனைவோர்கள் மூலப்பொருட்களையும், மற்ற பொருட்களையும் வாங்குவதற்கு மிகவும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். சில நேரங்களில் வெளிச்சந்தையில் மூலப்பொருட்களின் விலை மிக அதிகமாக இருக்கின்றது. எனவே கட்டுப்படியாகும் விலையில் இவர்களால் இந்த மூலப்பொருட்களைக் கொண்டு பொருட்களை உற்பத்தி செய்ய இயலவில்லை.

### சந்தையில் போட்டி

சிறிய மற்றும் குறுந்தொழில் முனைவோர்களின் நிறுவன அமைப்பு மிகச்சரியாக இருக்கும் என்று சொல்லுவதற்கு இயலாது. அவர்களால் மிகப்பெரிய நிறுவனங்கள் மூலம் ஏற்படும் போட்டியைச் சமாளிக்கவும் இயலாது. உதாரணமாக ஆட்களை வைத்து செங்கல் சூளை நடத்துபவரால் சேம்பர் நிறுவனத்துடன் போட்டியிட இயலாது.

### அதிக உற்பத்திச் செலவு

சிறிய மற்றும் குறுந்தொழில் முனைவோர்களின் முன்னேற்றத்தை மிகவும் பாதிப்பது எதுவென்றால் மிக அதிக அளவிலான உற்பத்திச் செலவே, அரசு உதவியும், மானியமும் இந்தப் பிரச்சனைகளை சமாளிப்பதற்கு ஓரளவிற்கு உதவி செய்கிறது என்றாலும் சந்தையில் நிரந்தரமாக ஓரிடத்தைப் பிடிப்பதற்கு இவர்கள் தங்களுடைய உற்பத்தியைப் பெருக்குவதும், தரத்தை மேம்படுத்துவதும் உற்பத்தி செலவைக் குறைப்பதும் மிகவும் அவசியம்.

### மிகுந்த அலைச்சல்

தொழில் முனைவோர் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு ஏதேனும் ஒரு காரணத்திற்காக அவசியம் அலைந்து கொண்டே இருக்க வேண்டும். ஆனால் குறுந்தொழில் முனைவோர் என்றாலே யாரும் மதிப்பில்லை. எனவே, அவர்களுடைய உழைப்பு மிகவும் வீணாகப் போகின்றது.

**சாதிக்கும் ஆர்வமின்மை**

சிறிய மற்றும் குறுந்தொழில் புரியும் தொழில் முனைவோர்கள் அனேகமாக வேறு ஏதும் அரசு வேலை கிடைக்காததினாலேயே தொழில் செய்ய வருகின்றனர். ஆகவே, ஆர்வமில்லாமல் தொழில் செய்ய வருவதனால் இதில் வெற்றி காண்பவர்களின் எண்ணிக்கை குறைவாகவே இருக்கின்றது.

மேற்சொன்ன பிரச்சனைகள் மட்டுமின்றி கட்டமைப்பு வசதிகள், மின்சாரம், தொழில்நுட்பம், பொருளாதாரம் மற்றும் சமூகப் பிரச்சனைகளும் இவர்கள் வெற்றிகரமான தொழில்முனைவோராக மாறுவதற்கு தடைக்கற்களாக உள்ளது.

பெண்களால் நிறுவனங்கள் ஆரம்பிக்கப்படும் போது அவற்றிற்கு சிறப்பான ஊக்கத் தொகையும், ஆதரவும் அரசாங்கத்தால் அளிக்கப்படுகின்றது. என்றாலும் நம் பெண்களிடம் இன்னும் தயக்கம் இருக்கின்றது.

**பெண் தொழில் முனைவோர்கள்**

உலகத்தின் மொத்த மக்கள் தொகையில் பெண்கள் சரிபாதியாக இருக்கின்றனர். ஆனால் வேலை வாய்ப்புகளில் அவர்களுக்கு கிடைக்கும் பங்கு மிகக் குறைவு. அனேகமாக உலக அளவில் பெண்களின் வருமானம் ஆண்களின் வருமானத்தை விட குறைவே. ஆனால், அவர்களின் உழைப்பு அதிலும் வளர்ந்து வரும் நாடுகளில் பெண்களுக்கு திருமணமே அவர்களின் வாழ்க்கையாக பெரும்பாலும் உள்ளது. மேலும், பெண்கள் வீட்டுச் சிறையினில் அடைபடுவதோடு மட்டுமின்றி குழந்தைகளை வளர்ப்பதிலும், வீட்டு வேலை செய்வதிலும் சமூகக் கட்டுப்பாடுகளினாலும் காணாமல் போய் விடுகின்றனர். மிகக் குறைந்த அளவு திறன் கொண்டவர்கள் பெண்களே என்று தான் இந்த உலகம் கருதுகிறது. அதன் அடிப்படையினிலேயே ஆண், பெண் இருவரின் கல்வியும், திறன்களும் வேறுபடுத்தப்படுகின்றன. ஆகவே பெண்கள் சுய நம்பிக்கையின்றி அடுத்தவர்களை சார்ந்திருப்பவர்களாக, வெற்றி பெருவதில் ஆர்வமில்லாதவர்களாக இருக்கின்றனர். எனவே பெண் தொழில் முனைவோர் யார்? என்றும் பெண் தொழில் முனைவோர்களின் வளர்ச்சியினைப் பற்றியும் அறிந்து கொள்வது அவசியம்.

பெண் தொழில் முனைவோர் என்பவர் ஒரு தொழில் நிறுவனத்தை பெண்களே ஆரம்பித்து, திறம்பட நடத்துதல் அல்லது மூலதனத்தில் 51% பெண்களின் பெயரிலிருத்தல் அல்லது 50% பெண்களுக்கு வேலைவாய்ப்பு ஒரு நிறுவனத்தில் இருக்கமானால் அவரே பெண் தொழில் முனைவோர் ஆவர்.

**பெண் தொழில் முனைவோர்களின் வளர்ச்சி**

நாட்டின் மேம்பாட்டிற்ாக பெண்கள் ஆற்றும் பங்கினைக் கருத்தில் கொண்டு 7வது ஐந்தாண்டுத் திட்டத்தில் மேம்பாட்டுத் திட்டத்தில் பெண்களுக்கென்று சிறப்புக் கவனம்

பெண்கள் செலுத்தப்பட்டது. இதன் முக்கியக் கொள்கை சிறு தொழில் வளர்ச்சியில் பெண்களுக்கும் முக்கியப் பங்களிப்பதே.

நகர் மயமாதல், தொழில் மயமாதல் மேலும், அதிகளவில் பெண்கள் கல்லூரிகளுக்குச் செல்வதினாலும் வேலைக்குச் செல்லும் பெண்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகிறது. தொழிற்சாலைகளின் எண்ணிக்கைப் பெருகினாலும் பெண் தொழில் முனைவோர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே இருக்கின்றது. ஆனாலும் கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறை மறைந்து தனிக்குடும்பம் என்றானபின் அவர்களின் தேவைகளும் அதிகரித்து விட்டன. போட்டி நிறைந்த தொழில் உலகத்திலும் பெண்கள் நுழைந்து விட்டனர்.

இந்தியாவில் மொத்த தொழில் முனைவோர்களின் எண்ணிக்கையில் பெண் தொழில் முனைவோர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே உள்ளது. இதற்கு முக்கியக் காரணம் அவர்கள் எண்ணங்களில் இருக்கும் தடைகள், சமூகத்தடைகள், உறவுமுறைகள் போன்றவை தொழில் உலகம் என்னும் புது உலகத்திற்கு, அவர்களைச் செல்ல அனுமதிப்பதில்லை. அவ்வாறே பெண்கள் தொழில் செய்ய விரும்பினாலும் அது தாங்கள் ஏற்கனவே செய்யும் சமையல் வேலையின் விரிவாக்கமாகவே அமைகிறது.

அதாவது ஊறுகாய், மசாலா, அப்பளம் மற்றும் கூடை முடைதல், பாய் முடைதல் போன்ற பழமையான குடிசைத் தொழிலையே விரிவாகச் செய்ய அனுமதித்தினர். இந்தியப் பெண்கள் முக்கியமாக வீட்டு உபயோகப் பொருட்களை தயாரிப்பதிலேயே தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர். ஏனென்றால் குறைந்த தொழில்நுட்பம் உடையதாவும், ஆண்களிடமிருந்து குறைந்த அளவு போட்டியையும் இத்தொழிலில் பெண்கள் சந்திக்கின்றனர். அதே சமயம் குஜராத்திலிருக்கும் பெண்கள் சோலார் எரிசக்தி கொண்டு குக்கர்களையும், ஒரிசாவில் இருக்கும் பெண்கள் உலோகப் பட்டறைகளையும் அமைத்ததன் மூலம் பெண்களுக்குப் பயிற்சி அளித்தால் அவர்கள் சிறந்த தொழில் முனைவோர்களாக விளங்குவார்கள் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. பல்வேறு அரசு அலுவலகங்களும், சமூக நல அமைப்புகளும், சுயஉதவிக் குழுக்களும் பெண் தொழில் முனைவோர்களின் எண்ணிக்கையை இந்நாட்டில் அதிகரித்துள்ளது. கடந்த சில வருடங்களில் பெண்கள் சாதிப்பதிலும், தொழில் முனைப்பிலும், பொருளாதார தனித்துவத்திலும் மிகுந்த அக்கறை கொண்டுள்ளனர். அவர்கள் வெற்றி பெருவதற்கான அனைத்து முயற்சிகளிலும் தங்களை ஈடுபடுத்திக் கொள்கின்றனர்.

## 4. சிறு தொழில் நிறுவனங்கள் : அவை எதிர்கொள்ளும் சவால்கள்

சிறு தொழில் நிறுவனம் என்பது தனது மொத்த முதலீட்டில் 60 லட்சத்தை நிலையான மூலதனமாக இயந்திரங்கள் வாங்குவதில் முதலீடு செய்திருந்தால் அது சிறு தொழில் நிறுவனமாக அரசால் அங்கீகரிக்கப்படுகின்றது.

**உரிமம் (லைசென்ஸ்)**

ஒரு தொழிலைத் துவங்குமுன் தொழிற்சாலை சட்டப்படி அதற்கான உரிமமம் பெறவேண்டும். ஏனென்றால் இயந்திரங்கள், மூலதனம், வெளிநாட்டுத்தொடர்பு ஆகியவை உருவாக்கிக் கொள்ளுதல் அல்லது மேம்படுத்துதல் செய்யும்போது அரசின் அனுமதியைப் பெற நமக்கு உரிமம் அவசியம்

சட்டம் 1951ன் கீழ் வரும் அனைத்துத் தொழில்களுக்கும் உரிமம் பெறவேண்டியது அவசியம். எரிபொருள் பாய்லர், மின்சார சாதனங்கள், தொலைதொடர்பு, போக்குவரத்து சாதனங்கள், தொழில்துறை இயந்திரங்கள், உரங்கள் ராசாயணம் கெமிக்கல் போன்ற பொருட்களை உற்பத்தி செய்வதென்றால் உரிமம் பெறுவது மிகவும் அவசியம்.

அதேபோன்று ஏற்கனவே தொழில் செய்து கொண்டு இருப்பவர் அந்நிறுவனத்திலே வேறு பொருள் தயாரிப்பதற்கும், அந்நிறுவனத்தை குறிப்பிட்ட அளவிற்குமேல் விரிவாக்கம் செய்வதற்கும் அல்லது நிறுவனம் நடக்கும் இடத்தை மாற்றுவதற்கும் அவசியம் உரிமம் பெறவேண்டும்.

**நிறுவனப் பதிவு**

தொழில் நுட்ப மேலாண்மை இயக்குநகத்திடம் சிறுதொழிலின் கீழ் வராத நிறுவனங்கள் தங்களை பதிவு செய்து கொள்ளத் தேவை இல்லை. ஆனால சிறு தொழில் நிறுவனங்கள் எங்கு நிறுவப்பட்டிருக்கின்றதோ அந்த மாநில தொழில்துறை இயக்குநகத்திடம் பதிவு செய்தல் வேண்டும்.

சிறு தொழில் நிறுவனங்கள் பதிவு செய்தல் கட்டாயமில்லை. ஆனால் தொழில் நிறுவனங்களை பதிவு செய்ய வைப்பதற்கு அரசாங்கம் சில சிறப்புச் சலுகைகளை வழங்குகின்றது. அவையாவன,

- இறக்குமதியில் சலுகை
- உடனடி தொலைபேசி இணைப்பு
- நிதி உதவி
- சந்தைப்படுத்த உதவி
- தொழில்நுட்ப உதவி

- தொழிற்பேட்டையில் - இடம் ஒதுக்குவதில் முன்னுரிமை போன்றவை வழங்கப்படுகிறது. மாவட்ட அளவில் பொது மேலாளர், மாவட்டத் தொழில்மையத்தில் சிறுதொழில் நிறுவனங்கள் தங்கள் அமைப்புகளை பதிவு செய்ய வேண்டும்.

## தொழில் நசிவு

தொழில் நசிவு என்பது தொழில் நிறுவனங்களை மட்டுமல்லாது, வங்கி, நிதிநிறுவனங்கள், பொதுமக்கள், அரசாங்கம் மற்றும் பொருளாதாரம் போன்றவற்றை நேரடியாகவும், மறைமுகமாகவும் பல்வேறு வகையில் பாதிக்கின்றது. எனவே தொழில் நசிவு ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ளுதல் மிகவும் அவசியம்.

தொழில் நசிவு ஒவ்வொருவரையும் ஒவ்வொருமாதிரி பாதிக்கும்.

| | | |
|---|---|---|
| முதலீடு செய்தவருக்கு | - | லாபம் தள்ளிப்போகின்றது |
| தொழிலதிபருக்கு | - | பாதிப்புக்குள்ளான நிறுவனம் |
| கடன் கொடுத்தவருக்கு | - | மோசமான பிரச்சனை |
| தொழில்வல்லுநருக்கு | - | தொழில்நுட்பத்தோல்வி |
| தொழிலாளிக்கு | - | மோசமான முதலாளி |

இவ்வாறாக தொழில் நசிவை ஒவ்வொரு துறையினரும், ஒவ்வொரு விதமாகப் பார்த்தாலும் மொத்தத்தில் லாபகரமற்ற, தொழிலாளர்களை பாதிக்கும் நிறுவனமாக உள்ளது.

இன்னும் தெளிவாகச் சொன்னால், தொழில் நசிவு என்பது, ஒவ்வொரு நிதிவருடத்தின் முடிவிலும் நஷ்டமானது, அந்நிறுவனத்தின் மொத்த சொத்துக்களைவிட அதிகமாக இருக்கும்.

## தொழில் நசிவிற்கான அறிகுறிகள்

தொழில் நசிவு என்பது ஒரே நாளில் திடீரென வந்து விடாது. தொழில் நசிவிற்கான அறிகுறிகள் தெரியும் ஆரம்பக் கட்டத்திலேயே வங்கியும், நிதிநிறுவனங்களிலும் கவனத்துடன் செயல்படத் துவங்கினால் அந்நிறுவனத்தை மிகப்பெரிய பிரச்சனையில் இருந்து காப்பாற்றி விடலாம். நசிவிற்கான அறிகுறிகள்

ஒழுங்காகத் தொடர்ந்து பணம் வராதிருத்தல்

மூலதனத்தை முழுமையாக உபயோகிக்காதிருத்தல்

- கடனை முறையாக திருப்பிச் செலுத்தாதிருத்தல் கடனை முறையாக திருப்பிச் செலுத்தாதிருத்தல்

- உற்பத்தி செய்த பொருட்கள் மிகுந்த அளவில் திரும்புதல்
- நடைமுறை மூலதனம் குறைதல்
- தொடர்ந்து மற்றும் அதிகமான பில்களுக்கு பணம் வராதிருத்தல்
- முக்கியமான நபர்கள் அடிக்கடி வேலையை விட்டு வெளியேறுதல்
- அதே போன்று நிறைய நிறுவனங்கள் இருத்தல்
- சரியான நேரத்தில் முதல் மற்றும் வட்டியை செலுத்தத தவறுதல்
- குறைவான காலக்கட்டத்திலேயே அதிகமான மாற்றங்களை நிறுவனத்தில் உருவாக்குதல்
- நிறுவன மேலாண்மையில் திடீர், திடீர் என மாற்றங்கள் கொண்டு வருவது
- நிறுவனத்தை நடத்துவதற்கு மட்டுமல்லாது நிதியை வேறு வேலைகளுக்கும் பயன்படுத்துதல்
- மூலதனத்திற்காக அதிக அளவில் நிதிநிறுவனங்களையே சார்ந்து இருத்தல்
- நடைமுறை முதலில், நிலையான முதலுக்காக செலவு செய்தல்
- நிதி ஆண்டின் முடிவில் நிதி அறிக்கையும், சரக்கு இருப்பு அறிக்கையும் தயார் செய்யாது இருத்தல்
- அடிக்கடி தொழிற்சாலையில் பிரச்சனைகள்
- லாபம் கூடி, குறைவது
- விற்பனை மந்தம்
- தேவையற்ற செலவுகள் அதிகமாதல்

இந்திய ரிசர்வ் வங்கி தொழில் நசிவு குறித்து கூறுவது என்னவென்றால் அதிகப்படியான நஷ்டத்தினால் சொத்து மதிப்பு குறைவது.

- கடனுக்கும், சொத்துக்குமான விகிதம் அதிகரித்தல்
- வரிகளை ஒழுங்காகக் கட்டாதிருத்தல்
- அசலும், வட்டியும் முறையாகச் செலுத்தாதிருக்தல்
- பங்குச் சந்தையில் பங்குகளின் மதிப்பு குறைவது
- உற்பத்தி செலவு அதகரித்து, லாபம் குறைவது

- நிதி நிறுவனங்களிடமிருந்து தேவையான நேரத்தில் நிதி உதவி கிடைக்காமல் போவது
- நடைமுறை முதலை சரியாக மேலாண்மை செய்யாதிருத்தல்

தொழில் நசிவிற்கான காரணங்களை கீழ்க்கண்ட வாறு பிரிக்கலாம்

**மேலாண்மை**

- முறையான தொழில் திட்டம் இல்லாமை
- நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தலும், கட்டுப்படுத்தலும் இல்லாமை
- மாற்றங்களுக்குத் தயாராக இல்லாதிருத்தல்
- மேலாண்மை நம்பகத் தன்மையை இழத்தல்

**சந்தையிடுதல்**

- தேவைகளை சரியாக கணக்கீடு செய்யாமை
- திட்டமிடுதல் இல்லாமை
- சில வியாபாரிகளையே நம்பியிருத்தல்
- சந்தை நிலவரம் தெரியாமை
- விற்பனைக்குப் பின் சேவை செய்யாதிருத்தல்
- முறையான விளம்பரமின்மை
- அரசு இந்நிறுவன தயாரிப்பு பொருட்களை வாங்குவதற்கு தயக்கம் காட்டுதல்
- உலகச் சந்தையில் மாற்றம்
- அதிகமான ஏற்றுமதி வரிகள்

**நிதி**

- இருக்கும் நிதியை முழுமையாக உபயோகிக்காதிருத்தல்
- நடைமுறை மூலதனத்தை சிறப்பாக மேலாண்மை செய்யாதிருத்தல்
- தவறான விலைக்கொள்கை
- நிதி-திட்டமிடுதலும், செலவுப்பட்டியல் தயாரித்தலும் செய்யாமை

- நிதியை வேறு செயல்களுக்கு செலவிடுதல்
- வங்கி மற்றும் நிதி நிறுவனங்கள் நிதி வழங்க தயங்குதல் அல்லது மறுத்தல்
- முதலீடு செய்வதற்கு ஏற்ற சூழல் இல்லாதிருத்தல்
- பொதுவுடைமை குறித்த அச்சம்

**உற்பத்தி**

- தவறான இடத்தையும், இயந்திரங்களையும் தேர்வு செய்தல்
- மூலப்பொருட்களை தாராளமாகச் செலவிடுதல்
- இயந்திரங்களை முறையாக பராமரிக்கா இயலாமை
- உற்பத்தி மற்றும் தரக்கட்டுப்பாட்டில் கவனமின்மை
- ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சியில் கவனமின்மை
- மூலப்பொருட்கள் பற்றாக்குறை
- இறக்குமதியில் கட்டுப்பாடு
- மாறுதலுக்கும், விரிவாக்கத்திற்கும் விரும்பாதிருத்தல்
- ஒரே பொருளுக்கு தாராளமாக உரிமம் கொடுத்தல்

**தொழிலாளர்கள்**

- வேலைக்கும், சம்பளம்/கூலிக்கும் தொடர்பின்மை
- வேலையாட்களுடன் நல்ல உறவின்மை
- நல்லவிதமாக பழகும் தன்மையின்மை
- வேலையாட்கள் குறைவாகவோ/அதிகமாகவோ இருத்தல்
- பொதுவாக வேலையாட்கள் நிறுவனத்தில் அமைதியின்றி இருத்தல்
- சங்க உறவுகள்
- அதிகாரிகளும், தொழிலாளர்களும் அடிக்கடி வேலையை விட்டுச்செல்லுதல்
- திறமை வாய்ந்த வேலையாட்கள் இன்மை

## தொழில் நசிவிலிருந்து ஒரு நிறுவனத்தை காப்பாற்ற மேற் கொள்ளப்படும் நடவடிக்கைகள்

ஒரு நிறுவனத்தை நசிவிலிருந்து காப்பாற்ற மூன்று முக்கிய செயல்ளை செய்யவேண்டும். அவை இரக்கம், வேகம் மற்றும் தியாகம் தொழில் நசிவிலிருக்கும் நிறுவனத்துடன் தொடர்புடைய ஒவ்வொரு நிறுவனமும் தங்களை காப்பாற்றிக் கொள்வதற்கு முயலாமல் சற்று விட்டுக் கொடுத்துச் செல்லவேண்டும். தொழில் நசிவிலிருந்து காப்பாற்ற வங்கிகளும் தங்களால் இயன்ற முயற்சிகளை செய்ய வேண்டும் என்று இந்தியன் ரிசர்வ் வங்கி கூறுகிறது. அது கிழ்க்கண்டவாறு வங்கியின் செயல்களை வறையறுத்துள்ளது.

- வங்கியும், நிதிநிறுவனங்களும் சேர்ந்து, தொழில் நசிவுற்ற நிறுவனத்திற்கு மீண்டும் புத்துயிர் கொடுக்க இயலுமா என்பதை ஒரு மாதத்திற்குள் கண்டறிய வேண்டும்.
- புத்துயிர் கொடுப்பதற்கான அறிக்கையும், முறைகளும் 3 மாதத்திற்கு தயார் செய்யப்பட வேண்டும்.
- வங்கி மற்றும் நிதி நிறுவனத்தால் தயார் செய்யப்பட்ட திட்டம் 3 மாதத்திற்குள் செயல்படுத்தப்பட வேண்டும்.
- எவ்வகையான குறைபாடுகள் உள்ளன, எவ்வளவு சலுகைகள் வழங்கினால் அந்நிறுவனம் பிழைத்துக் கொள்ளும்
- எவ்வளவு உபகரணங்கள் அல்லது மற்ற நிலைமுதல் சொத்துக்கள் இருந்தால், பொறுப்புக்களை அடைக்க இயலும்.
- தேவையற்ற சொத்துக்களை விற்பதன்மூலம் எவ்வளவு பணம் திரட்ட இயலும்
- புத்துயிர் கொடுப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட திட்டத்தின்படி தான் அந்நிறுவனம் செயல்படுகின்றதா என்று ஆராய்தல்
- நடைமுறை மூலதனம் (எதிர்காலத்திற்கும் சேர்த்து) எவ்வளவு வேண்டும் என்று கணக்கிடுதல்
- நிதியை தேவைக்கேற்ப அவ்வப்போது வழங்குதல்
- பிரச்சனைகள் உள்ள இடங்களை சரிசெய்து நிறுவனத்தை மேம்படுத்துதல்
- நிதி நிலையை தொடர்ந்து கண்காணித்துக் கொண்டே இருத்தல்
- நிறுவனத்தின் நிலவரத்தைத அறிந்து அதற்குத் தகுந்தாற்போல் சரியான நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.

## பொருள் :

பொருள் என்பது ஒருவரின் ஏதாவது ஒரு தேவையினை பூர்த்தி செய்யுமானால் அதை பொருள் என்று சொல்லாலாம். அது பார்க்கக் கூடியதாகவும் இருக்கலாம். கண்ணுக்குத் தெரியாததாகவும் இருக்கலாம் (இசை), கண்ணுக்குத் தெரியும் பொருட்கள் கீழ்க்கண்டவாறு பிரிக்கப்படுகின்றன.

**அவையாவன**

- வாடிக்கையாளர் பொருட்கள்
- விவசாயப் பொருட்கள்
- இயந்திரப் பொருட்கள்
- சேவை

வாடிக்கையாளர் பொருட்கள் என்பது அன்றாடம் தங்கள் வாழ்க்கையை நடத்தவதற்குத் தேவையான பொருட்கள், விவசாயம் செய்வதற்குத் தேவையான விதை, உரம் போன்றவை விவசாயப்பொருட்கள், இயந்திரங்கள் - சிறிய ஆணி முதல் பெரிய ஊர்தி வரை அடங்கும். இவை அல்லது சேவை எனப்படும் பழுதுபார்க்கும் வேலைகள் அல்லது ஏஜென்ஸிகள் - இவற்றில் நாம் எதைத் தேர்வு செய்யப் போகின்றோம்? நாம் பொருட்களை யாருக்கு விற்கப்போகின்றோம்? (உதாரணம் மாணவர்கள் என்றால் ஆணா, பெண்ணா? எந்த வயதினர் ஆரம்பப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி அல்லது கல்லூரி. கல்லூரி என்றால் கலைக்கல்லூரி, தொழில்நுட்பக் கல்லூரி, மருத்துவக்கல்லூரி) என்று சரியான தேர்வுடன், பொருட்களை தேர்வு செய்தால் நிச்சயமாக வெற்றிகரமான தொழில் முனைவோராகலாம்.

## தொழில் செய்வதற்கான பொருட்களை அடையாளங்காணுதல்

ஒவ்வொரு தொழில் முனைவோரும் தாங்கள் தொழில் தொடங்குவதற்கான பொருளை பல்வேறு வகையில் அடையாளம் காணுகின்றனர். சந்தையில் தங்கள் முகவர்களை அனுப்பி சந்தை நிலவரம் அறிந்து மக்களிடம் அதிக தேவையுள்ள பொருட்களை என்னென்ன என்று தெரிந்து கொள்கின்றனர். அவற்றுள் எது அதிகமாக விற்பனையாகின்றது, எது அதிகலாபம், தருகின்றது என்று ஆய்வு செய்து அதன்பின் ஒரு பொருளை தேர்வு செய்கின்றனர். அதன்பின் திட்ட அறிக்கை தயாரிக்கப்படுகின்றது.

## திட்ட அறிக்கை

திட்ட அறிக்கை என்பது ஒரு வீடு கட்டுவதற்காக தயாரிக்கப்படும முன்திட்டம் (Blue Print) எவ்வாறு இருக்கமோ, அது போன்று திட்ட அறிக்கையை பார்த்தவுடன், அதில் என்ன இருக்கின்றது என்பது குறித்து எளிதாகப் புரிந்து கொள்ளும்படி இருக்க வேண்டும்.

திட்ட அறிக்கையானது ஒரு திட்டத்தை எவ்வாறு செயல்படுத்தப்போகின்றோம், நம் குறிக்கோளை எத்தனை காலத்திற்குள் செயல்படுத்தி முடிப்போம், அதற்கான மூலதனம் எவ்வளவு? லாபம் எவ்வளவு வரும் என்பது குறித்து தெளிவாக விளக்கப்பட்டிருக்கும்.

**திட்ட அறிக்கை தயாரித்தலில் உள்ள நிலைகள்**

இவை நான்கு நிலைகளாகும்

- திட்டம் உருவாகும் நிலை - என்ன பொருட்கள் குறித்து திட்ட அறிக்கை தயாரித்தல் என்று எண்ணங்கள் உருவாவதல்
- வடிகட்டும் நிலை - லாபம் ஈட்டாத பொருட்களுக்கான திட்டம் தயாரிக்கும் எண்ணங்கள் வடிகட்டப்படும்
- அடையாளம் காணும் நிலை - லாபம் சம்பாதிக்கும் பொருட்களை மட்டும் அடையாளம் காணுதல்
- பரிசோதனை நிலை - சந்தையில் வெள்ளோட்டம் விடுவதன் மூலம் இப்பொருள் லாபம் ஈட்டுமா என்று கண்டுபிடித்தல்

**திட்ட அறிக்கையில் உள்ள காரணிகள்**

- தொழிற் சாலையின் பெயர் மற்றும் விலாசம்
- உற்பத்தி செய்யப்போகும் பொருளின் பெயர்
- தொழிற்சாலை அமையப்போகும் இடத்தில் உள்ள கட்டிடத்தின் அளவு மற்றும் வெற்றிடத்தின் அளவு
- மூலப்பொருள்கள் கிடைக்கும் இடம்
- மூலப்பொருட்களின் தேவையான அளவு
- தொழிலாளர்களின் தேவையான அளவு
- தொழிலாளர்களின் எண்ணிக்கை

  தொழிற்சாலை தொழிலாளர்களின் எண்ணிக்கை கல்வித்தகுதி

  அலுவலகத் தொழிலாளர்களின் எண்ணிக்கை கல்வித்தகுதி
- மூலதனம்
  நிலையான முதல் - கட்டிடம், இயந்திரம் இன்னபிற
  நடைமுறை முதல் - மூலப்பொருள், கூலி, மற்ற சேவை செலவுகள்

- உற்பத்தியின் அளவு

  எதிர்பார்க்கும் அளவு

  உண்மையான உற்பத்தி அளவு

- விற்பனை அளவு

  எதிர்பார்க்கம் அளவு

  உண்மையான விற்பனை அளவு

- உற்பத்திச் செலவு

  எதிர்பார்க்கும் அளவு

  உண்மையான விற்பனை அளவு

- லாபத்தின் அளவு

  எதிர்பார்க்கும் அளவு

  உண்மையான லாபத்தின் அளவு

ஒரு திட்ட அறிக்கையானது மேலே கூறப்பட்ட அனைத்து விபரங்களையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். இது போக ஒரு பொருளுக்கு எவ்வாறு விலை நிர்ணயம் செய்யப் போகின்றோம் - தேவையின் அடிப்படையில், மூலதனம் செய்ததின் அடிப்படையில், போட்டியாளர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து அல்லது வேறு ஏதேனும் விலை நிர்ணயக் கொள்கை என்றால், ஏன் அந்த விலை நிர்ணயக் கொள்கை பின்பற்றப்படுகின்றது என்று விளக்கப்பட வேண்டும்.

மேலே கூறப்பட்டவை தவிர மற்றொன்றும் திட்ட அறிக்கையில் விளக்கப்பட்டிருக்க வேண்டும். அதாவது BEP (Break Even Point)பொருட்களை உற்பத்தி செய்யும்பொது, மொத்த உற்பத்திச் செலவு (expenses) )மற்றும் விற்பனை ஆகிய இரண்டு காரணிகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

OY - உற்பத்திச் செலவு


OX - விற்பனை

TC - மொத்தச் செலவு

VC - மாறுபடும் செலவு

FC - நிலையான செலவு

BEP - மொத்தச் செலவும் - உற்பத்திச் செலவு, மாறுபடும் செலவும் வெட்டிக் கொள்ளும் குறுக்குப்புள்ளி




BRP CHART

நாம் பொருளை உற்பத்தி செய்தாலும், செய்யாவிட்டாலும் அல்லது அதிகமாக உற்பத்தி செய்தாலும் சில செலவுகளை நிலையாகச் செய்ய வேண்டும். அவை இட வாடகை, அலுவலகச், இன்னபிற. சில செலவுகள் பொருட்களின் உற்பத்தி அதிகரிக்க செலவுகளும் மாறுபடும். உற்பத்தி இல்லை என்றால் செலவும் இருக்காது இதுதான் மாறுபடும் செலவு இந்த இரண்டின் (நிலையான செலவு + மாறுபடும் செலவு) கூட்டுத் தொகையே மொத்தச் செலவு.

## 5. பதிவேடுகள் பராமரிப்பு

தொழில் முனைவோருக்கு என்று தனியாக பதிவேடுகள் ஏதும் மகளிர் குழுக்களை பொருத்தளவில் இல்லை. மகளிர் குழுக்கள் அனைவரும் பராமரிக்க வேண்டிய பதிவேடுகளுடன், தொழில் முனைவோர்களின் பதிவேடுகள் இணைத்துக் கொள்ளலாம். குறிப்பாக ஒவ்வொரு சிக்கனம் மற்றும் சேமிப்பு நாணயச் சங்கமும் கீழ்க்காணும் பதிவேடுகளைப் பராமரிக்க வேண்டும். அதற்கான பயிற்சி சமுதாய அமைப்பாளரால் கொடுக்கப்படும்.

- வருகைப்பதிவேடு
- குழுத் தீர்மானப் பதிவேடு
- சேமிப்புப் பதிவேடு
- கடன் பேரேடு
- ரொக்கப் பேரடு
- தனிநபர் சேமிப்புக் கணக்குப் புத்தகம்
- குழுக் கடிதக் கோப்பு
- பார்வையாளர் புத்தகம்

### கவனத்தில் கொள்ள வேண்டியவை

திட்டப் பணியாளர்கள் குழுக் கூட்டங்களில் கலந்து கொள்ளும் போது வங்கிக் கணக்குப புத்தகத்தைப் பதிவேடுகளுடன் சரிபார்க்க வேண்டும். வங்கியில் குழுவின் சேமிப்புப் பயன்படுத்தப்படாமல் தேக்க நிலை அடைந்துள்ளதா? என்பதைச் சரி பார்க்க வேண்டும்.

வங்கியிலிருந்து எடுக்கப்பட்ட பணத்திற்குத் தீர்மானம் இயற்றப்பட்டுள்ளதா? பதிவேடுகளில் பதியப்பட்டுள்ளதா? குழு உறுப்பினர்களுக்குத் தெரியுமா? இதைக் கவனிக்க வேண்டும்.

குழுக் கூட்ட நாளையும், வங்கியின் சேமிப்புக் கணக்குப் புத்தகத்தில் குழுச் சேமிப்புப் பணம் செலுத்திய நாளையும் சரி பார்க்கலாம். வசூல் தொகை உடனுக்குடன் செலுத்தப்பட்டுள்ளதா? தாமதம் உள்ளதா? காரணம் என்ன?

### திர்மானப் புத்தகம்

ஒவ்வொரு சங்கக்கூட்டம் நடைபெற்ற நாளில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள், குழுவின் அன்றைய கூட்ட நடவடிக்கைகள் இதில் பதிவு செய்யப்படும்.

தீர்மானப் புத்தகத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்களின் கையெழுத்துப் பெறப்பட வேண்டும்.

தீர்மானப் புத்தகத்தில் உறுப்பினர்கள் கையொப்பம் பொதுவாக பெறப்படுகிறது. எனவே, குழுத் தீர்மானங்கள் ஏற்கப்பட்டு எழுதப்பட்டவுடன் அதனை ஒட்டியே தலைவர், செயலாளர், பொருளாளர் கையெழுத்திட வேண்டும்.

## மாதிரி தீர்மானப் பதிவேடு

# சேமிப்பு மற்றும் சிக்கண நாணயச் சங்கம்

## சங்கத் தீர்மானப் பதிவேடு

கூட்ட நாள் : 25.12.2002 — சென்ற கூட்டம் முடிய சேமிப்பு ரூ. 20,000/-

உறுப்பினர் எண்ணிக்கை : — நடப்புக் கூட்டச் சேமிப்பு ரூ.5,000/-

வருகை : — மொத்தச் சேமிப்பு ரூ. 25,000/-

| தீர்மானம் எண் | பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| 1. | கூட்டத் தொடக்கம் | இன்று திருமதி. வள்ளியைத் தவிர அனைவரும் சரியாக 7.30 மணிக்கு வருகை தந்தனர் |
| 2. | சேமிப்பு | வார சேமிப்புத் தொகை ரூ. 25 வீதம் ரூ. 500 வசூல் செய்யப்பட்டது. வெளியூர் சென்றுள்ள திருமதி. வள்ளி அவரது மகள் மூலமாக ரூ. 25 கொடுத்தனுப்பி உள்ளார். |
| 3. | சங்கக் கடன் வழங்குதல் | திருமதி. ராணிக்கு ரூ. 500 வழங்க முடிவு செய்யப்பட்டது |
| 4. | வங்கிக்குச் செல்லுதல் | திருமதி. சொர்ணத்தை வங்கிக்கு அனுப்பக் குழு தீர்மானிக்கிறது. |

அனைத்து உறுப்பினர்களின் கையொப்பம்

## மாதிரி ரொக்க ரசீது

### ரோஜா மகளிர் மன்றம்

*கக்கன் நகர்*

*எண் : 1* *நாள் : 7.11.2002*

உறுப்பினர் பெயர் : திருமதி. பூங்கோதை

| விவரம் | தொகை | |
|---|---|---|
| | ரூ. | பை. |
| நவம்பர் 2002 மாதச் சந்தா ... ... ... | 02 | 00 |
| சேமிப்பு | 25 | 00 |
| சங்கக் கடன் செலுத்தியது ... ... ... | 250 | 00 |
| வட்டி செலுத்தியது ... ... ... | 50 | 00 |
| இதர வகைகள் ... ... ... | | |
| மொத்தம் | 327 | 00 |

(ரூபாய் முன்னூற்றி இருபத்தேழு மட்டும் பெற்றுக் கொள்ளப்பட்டது)

பணம் செலுத்துபவர் கையொப்பம் தலைவர்/பொருளாளர் கையொப்பம்

# மாதிரி ரொக்க ரசீது

## ரோஜா மகளிர் மன்றம்

*கக்கன் நகர்*

*எண் : 2* *நாள் : 7.11.2002*

உறுப்பினர் பெயர் : திருமதி. ஜோதி

| விவரம் | தொகை ரூ. | பை. |
|---|---|---|
| நவம்பர் 2002 மாதச் சந்தா ... ... ... | *02* | *00* |
| சேமிப்பு | *25* | *00* |
| சங்கக் கடன் செலுத்தியது ... ... ... | *100* | *00* |
| வட்டி செலுத்தியது ... ... ... | *10* | *00* |
| இதர வகைகள் ... ... ... | | |
| மொத்தம் | *137* | *00* |

(ரூபாய் நூற்றி முப்பத்தேழு மட்டும் பெற்றுக் கொள்ளப்பட்டது)

## மாதிரி ரொக்க பதிவேடு

# ரோஜா மகளிர் மன்றம்

*ரொக்கப் பதிவேடு*

| வ. எண் | உறுப்பினர் பெயர் | சேமிப்பு | சந்தா | சங்கக் கடன் அசல் | சங்கக் கடன் வட்டி | இதர வரவு | மொத்த வரவு | சங்கக் கடன் | இதரச் செலவு | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | பூங்கோதை | 25 | 2 | 250 | 50 | ... | 327 | | | |
| 2. | ஜோதி | 25 | 2 | 250 | 10 | ... | 327 | | | |
| 3. | | | | | | | | | | |
| 4. | | | | | | | | | | |
| 5. | | | | | | | | | | |
| 6. | | | | | | | | | | |
| 7. | | | | | | | | | | |
| 8. | | | | | | | | | | |
| 9. | | | | | | | | | | |
| 10. | | | | | | | | | | |
| 11. | | | | | | | | | | |
| 12. | | | | | | | | | | |
| 13. | | | | | | | | | | |
| 14. | | | | | | | | | | |
| 15. | | | | | | | | | | |
| 16. | | | | | | | | | | |
| 17. | | | | | | | | | | |
| 18. | | | | | | | | | | |
| 19. | முனுசாமி | 25 | 2 | | | 27 | | | | |
| 20. | மொத்தம் | 500 | 40 | 300 | 60 | | | | | |

| | |
|---|---|
| ஆரம்ப ரொக்க இருப்பு | ரூ. 200 |
| மொத்த ரொக்க வரவு | ரூ 500 |
| மொத்த வர | ரூ. 700 |
| செலவு | ரூ. 200 |
| கையிருப்பு | ரூ. 500 |

## பணம் பட்டுவாடா வவுச்சர் (மாதிரி)

<table>
<tr><td colspan="2" align="center">ரோஜா மகளிர் மன்றம்<br>கக்கன் நகர்</td></tr>
<tr><td>உறுப்பினர் பெயர் : திருமதி. பழனியம்மாள்</td><td align="right">நாள் : 7.11.2002</td></tr>
<tr><td colspan="2" align="center">SJSRY - சுழல் நிதிக் கடன்</td></tr>
<tr><td colspan="2">மகள் படிப்புச் செலவிற்காக ரூ. 1000 (ரூபாய் ஆயிரம் மட்டும் மன்றத்திலிருந்து வழங்கப்பட்டது.</td></tr>
<tr><td colspan="2" align="right">Revenue Stamp</td></tr>
<tr><td>தலைவர், பொருளாளர்<br>கையொப்பம்</td><td align="right">பணம் பெறுபவர்<br>கையொப்பம்</td></tr>
</table>

## சேமிப்புப் பேரேடு

*ஒவ்வோர் உறுப்பினரும், ஒவ்வொரு சங்கக் கூட்டத்தில் கட்டிய சேமிப்பையும், சந்தாவையும் அவரின் சேமிப்புக் கணக்குப் பேரேடு பக்கத்தில் நடப்புக் கூட்டச் சேமிப்புப் பகுதியில் நாளினைக் குறிப்பிட்டு எழுத வேண்டும்.*

*முந்தைய மொத்த சேமிப்புடன நடப்புக் கூட்டச் சேமிப்பைக் கூட்டிவரும் தொகையை மொத்த சேமிப்பு பகுதியில் செலுத்த வேண்டும்.*

*மாதிரிப் பதிவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.*

## சேமிப்புப் பேரேடு

<table>
<tr><td colspan="3">உறுப்பினர் பெயர் : பூங்கோதை</td><td colspan="2" align="right">உறுப்பினர் எண் : 1</td></tr>
<tr><td>நாள்</td><td>நடப்புக் கூட்டச் சேமிப்பு ரூ.</td><td>மொத்தச் சேமிப்பு ரூ</td><td>சந்தா ரூ</td><td>தலைவர், பொருளாளர் கையொப்பம்</td></tr>
<tr><td></td><td>முன் கணக்கு</td><td>975</td><td></td><td></td></tr>
<tr><td>31.10.2002</td><td>25</td><td>1000</td><td>2</td><td></td></tr>
<tr><td>15.11.2002</td><td>25</td><td>1025</td><td>2</td><td></td></tr>
</table>

| உறுப்பினர் பெயர் : ஜோதி | | | | உறுப்பினர் எண் : 1 |
|---|---|---|---|---|
| நாள் | நடப்புக் கூட்டச் சேமிப்பு ரூ. | மொத்தச் சேமிப்பு ரூ | சந்தா ரூ | தலைவர், பொருளாளர் கையொப்பம் |
| | முன் கணக்கு | 975 | | |
| 31.10.2002 | 25 | 1000 | 2 | |
| 15.11.2002 | 25 | 1025 | 2 | |

## கடன் பேரடு

- தனிநபர் ரசீதை அடிப்படையாக வைத்து, உறுப்பினர் கட்டிய சங்கக் கடன் அசலையும் வட்டி வசூலையும் அவரின் கடன் பேரேடு புத்தகத்தில் உரிய பகுதியில் எடுத்து எழுத வேண்டும்.
- கடன் கொடுக்கும் போது கடன் தொகைப் பகுதியில் பதிவு செய்ய வேண்டும்
- கடன் தொகை, நோக்கம், தவணை, வட்டி விகிதம் ஆகியவற்றை ஒவ்வொரு கணக்கிலும் குறிப்பிட வேண்டும்.
- கடன் தொகையிலிருந்து அதில் திருப்பிச் செலுத்தியதைக் கழித்து மீதிக் கடன் நிலுவையைக் குறிப்பிட வேண்டும்.
- கடன் முடிக்கப் பெறும் போது கடன் வழங்கிய தொகை மொத்தமும் கடன் அசல் திரும்பச் செலுத்திய மொத்தத்தையும் தனியாகக்கூட்டி இரண்டும் சமமாக உள்ளதா என்பதைச் சரிபார்க்க வேண்டும்.

## மாதிரிக் கடன் பேரேடு (Loan Ledger)

கடன் பேரேடு எண் :

உறுப்பினர் பெயர் : ஜோதி — உறுப்பினர் எண் : 11

| நாள் | ரசீது எண் | விவரம் | கடன் தொகை | தவணை | வட்டி | திரும்பச் செலுத்தியது அசல் வட்டி | கடன் நிலுவை | தலைவர் பொருளாளர் கையொப்பம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7.10.2002 | 10 | மருத்துவக்கடன் | 2500 | 10 | 2% | | 2500 | |
| 7.11.2002 | 11 | | | | | 250 50 | 2250 | |
| | | | | | | | | |

# பொதுப் பேரேடு

**பொதுப் பேரேட்டில் கீழ்க்காணும் தலைப்புகளில் தனித்தனிப் பக்கங்களை ஒதுக்க வேண்டும்.**

1. சேமிப்பு
2. சந்தா
3. சங்கக் கடன் கொடுத்தது - சங்கக் கடன் வசூல்
4. அபராதம், இதரச் செலவுகள்
5. சேவைக் கட்டணம்
6. பயணச் செலவு
7. குழுப் பாதுகாப்பு நிதி
8. SJSRY Revolving Fund

## தனிநபர் சேமிப்புக் கடன் புத்தகம்

1. இப்புத்தகம் ஒவ்வோர் உறுப்பினருக்கும் வழங்கப்பட வேண்டும்.
2. இப்புத்தகம் இரண்டு பகுதிகளாக உள்ளன. முதல் பகுதி சேமிப்புப் பகுதி. இரண்டாவது கடன் பகுதி
3. இப்புத்தகத்தின் மூலம் உறுப்பினர்கள், அவர்கள் இதுவரை எவ்வளவு மொத்தம் சேமிப்புச் செய்துள்ளார்கள்? என்பதையும் வாங்கிய கடனில் எவ்வளவு திருப்பிச் செலுத்தியுள்ளார்கள்? என்பதையும், அவர்கள் பெயரில் மீதிக் கடன் நிலுவை எவ்வளவு உள்ளது? என்பதையும் தெரிந்து கொள்ளலாம்.

## சேமிப்புப் பகுதிப் பதிவுகள்

ஒவ்வோர் உறுப்பினரும் ஒவ்வொரு குழுக்கூட்டத்தில் கட்டிய சேமிப்பு அவரின் தனிநபர் சேமிப்பு ஆகியவற்றைக் கடன் புத்தகத்தின் நடப்புக் கூட்டச் சேமிப்புப் பகுதியில் நாள் குறிப்பிட்டு எழுத வேண்டும்.

முந்தைய மொத்த சேமிப்புடன் நடப்புக் கூட்டச் சேமிப்பைக் கூட்டி வரும் தொகையை மொத்த சேமிப்புப் பகுதியில் எழுத வேண்டும்.

## தனிநபர் சிறு சேமிப்பு கடன் புத்தகம்

**சிறுசேமிப்பு விவரம்**

உறுப்பினர் பெயர் : பூங்கோதை | உறுப்பினர் எண் : 11

| நாள் | நடப்புக் கூட்டச் சேமிப்பு ரூ. | மொத்தச் சேமிப்பு ரூ | சந்தா ரூ | தலைவர், பொருளாளர் கையொப்பம் |
|---|---|---|---|---|
| | முன் கணக்கு | 975 | | |
| 31.10.2002 | 25 | 1000 | | |
| 15.11.2002 | 25 | 1025 | 2 | |

### கடன் பகுதிப் பதிவுகள்

தனிநபர் ரசீதை அடிப்படையாக வைத்து ஒவ்வோர் உறுப்பினர் கட்டிய சங்கக் கடன் அசலையும், வட்டி வசூலையும் அவரின் தனி நபர் சிறுசேமிப்புக் கடன் புத்தகத்தில் உரிய இடத்தில் எழுத வேண்டும்.

கடன் வழங்கும் போது கடன் தொகைப் பகுதியில் பதிவு செய்ய வேண்டும். கடன் தொகையிலிருந்து அசல் திருப்பிச் செலுத்தியதைக் கழித்து, மீதிக் கடன் நிலுவையைப் பார்த்துப் பதிவு செய்ய வேண்டும்.

## தனிநபர் கடன் புத்தகம்

கடன் பேரேடு எண் :

உறுப்பினர் பெயர் : பூங்கோதை உறுப்பினர் எண் : 11

| நாள் | ரசீது எண் | விவரம் | கடன் தொகை | தவணை | வட்டி | திரும்பச் செலுத்தியது அசல் வட்டி | கடன் நிலுவை | தலைவர் பொருளாளர் கையொப்பம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7.10.2002 | 10 | மருத்துவக்கடன் | 2500 | 10 | 2% | | 2500 | |
| 7.11.2002 | 11 | | | | | 250 50 | 2250 | |

### பார்வையாளர் புத்தகம்

சிக்கனம் மற்றும் சேமிப்பு நாணயச் சங்கப் பார்வையாளர்களிடம் புத்தகத்தைக் கொடுத்து மன்றம் பற்றிய கருத்துக்களை எழுதக் கேட்டுக் கொள்ள வேண்டும்

இத்தகைய ஆலோசனைகள் சங்க வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும்.

## 6. தணிக்கையியல்

### ஸ்பைசர் மற்றும் பெக்ஸரின் இலக்கணம்

உண்மையான மற்றும் தெளிவான வியாபார நிலையைக் காட்டக்கூடிய வகையில் இருப்புநிலைக்குறிப்பு முறையாக எழுதப்பட்டுள்ளது என்றும் உண்மையான இலாப நட்டமற்ற புள்ளியில் (செந) ஓர் அமைப்பின் மொத்த வருவாயும் மொத்த செலவும் சமமகாக இருக்கும். நட்டத்தை தவிர்க்க குறைந்தது இப்புள்ளி அளவிற்காவது வருவாய் ஈட்ட வேண்டும். மற்றும் தெளிவான இலாபம் அல்லது நட்டத்தை இலாப நட்டக் கணக்கு காட்டுகிறது என்று தன்னிடம் காட்டப்பட்ட புத்தகங்கள், தரப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கங்களின் அடிப்படையில் ஒரு தணிக்கையாளர் திருப்தி அடைவதற்காக, இல்லையென்றால் அவர் எவ்வகையில் திருப்தி அடையவில்லை என்பதை அறிவதற்காக வியாபார புத்தகங்கள், கணக்குகள் மற்றும் சான்றுகளைச் சோதனையிடுதலே தணிக்கையாகும்

### நோக்கங்கள்

**தணிக்கையின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு**

- இருப்பு நிலைக்குறிப்பு முறையாக எழுதப்பட்டுள்ளதா என்று கண்டறிதல்
- வியாபார நிலையை உண்மையாகவும் தெளிவாகவும் இருப்பு நிலைக்குறிப்பு காட்டுகிறதா என்று கண்டறிதல்.
- நிதிப்பருவத்திற்குரிய இலாபம் அல்லது நட்டத்தை உண்மையாகவும் தெளிவாகவும் இலாபநட்டக் கணக்கு காட்டுகிறதா என்று கண்டறிதல்.
- பிழைகளைக் கண்டுபிடித்தலும் தடுத்தலும்
- மோசடிகளைக் கண்டுபிடித்தலும் தடுத்தலும்

### பிழைகளைக் கண்டுபிடித்தலும் தடுத்தலும்

பிழைகள் இரண்டு வகைப்படும். அவை

- எழுது பிழைகள்
- விதிப் பிழைகள்

### எழுது பிழைகள்

**எழுது பிழைகளை கீழ்க்காணும் நான்கு வகைகளாகப் பிரிக்கலாம்**

- விடு பிழைகள்
- செய் பிழைகள்

- ஈடு செய் பிழைகள்
- இரட்டிப்புப் பிழைகள்

**விடு பிழைகள்**

ஒரு நடவடிக்கையை முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ கணக்குப் பதிவேடுகளில் பதியாமல் விட்டு விடுவதால் இப்பிழைகள் ஏற்படுகின்றன. பகுதி விடுபிழை இருப்புச் சோதனைப் பட்டியலை பாதிக்கும். ஆனால் முழு விடுபிழை இருப்புச் சோதனைப் பட்டியலைப் பாதிப்பதில்லை.

**செய் பிழைகள்**

தவறான பதிவுகள், எடுத்தெழுதல், பெயர்த்தெழுதல் மற்றும் கணக்கிடுதல் போன்றவற்றால் இவ்வகைப் பிழைகள் ஏற்படுகின்றன. உதாரணம்: ரூ. 567 எனும் தொகையை ரூ. 576 என்று எழுதுதல். இருப்புச் சோதனைப் பட்டியல் இப்பிழைகளை காட்டலாம் அல்லது காட்டாமல் இருக்கலாம். இப்பிழை பதிவு செய்யும் போதே ஏற்பட்டிருக்குமானால் இருப்புச் சோதனைப் பட்டியலை இது பாதிக்காது.

**ஈடு செய் பிழைகள்**

ஒரு பிழையினால் மற்றொரு பிழை சரிக்கட்டப்பட்டிருக்குமானால், அது ஈடுசெய் பிழையாகும். உதாரணம்: ரூ 10 பற்று எழுத வேண்டிய Aன் கணக்கில் ரூ 100ஐ பற்றெழுதியும், அதே சமயம் ரூ 100 பற்று எழுதவேண்டிய Bன் கணக்கில் ரூ 10ஐ பற்றெழுதியும் இருத்தல் இது தவறானதாக இருந்தாலும் மொத்தப்பற்று ரூ 110 ஆகிவிடுகிறது. எனவே, இப்பிழைகள் இருப்புச் சோதனைப் பட்டியலை பாதிப்பதில்லை.

**இரட்டிப்புப் பிழைகள்**

ஒரு நடவடிக்கையை இரண்டு முறை கணக்குப் புத்தகங்களில் பதிவு செய்தாலோ அல்லது எடுத்தெழுதினாலோ இப்பிழைகள் ஏற்படுகின்றன. இப்பிழைகள் இருப்புச் சோதனைப் பட்டியலை பாதிப்பதில்லை.

**விதிப் பிழைகள்**

கணக்கியல் விதிகளை மீறுவதால் இப்பிழைகள் ஏற்படுகின்றன. உதாரணம் முலதனச் செலவுகளையும் நடைமுறைச் செலவுகளையும் தவறாகப் பிரித்து எழுதுதல், விதிகளுக்கு மாறாக சொத்துக்களை மதிப்பிடுதல் போன்றவை. இப்பிழைகளும் இருப்புச் சோதனைப் பட்டியலை பாதிப்பதில்லை.

பிழைகளைக் கண்டுபிடித்தல் ஒரு தணிக்கையாளரின் கடமை அல்ல. ஆனால் சிலசூழ்நிலைகளில் அவரை இப்பணியில் ஈடுபடுத்தலாம். இத்தகைய சூழ்நிலைகளில், அவர் ஒரு கணக்காளரே தவிர தணிக்கையாளர் அல்ல. ஒரு பிழையைக் கண்டுபிடிப்பதற்குக் கீழ்க்காணும் வழிமுறைகள் உபயோகமானவை:

- இருப்புச் சோதனைப் பட்டியலின் கூட்டுத் தொகையை சரிபார்த்தல்
- துணையேடுகளின் கூட்டுத் தொகையை மறு முறை சரிபார்த்தல்.
- இருப்புச் சோதனைப் பட்டியலில் உள்ள கணக்குகளின் பெயர்களைப் பேரேட்டுக் கணக்குகளின் பெயர்களோடு ஒப்பிட்டுப் பார்த்தல்.
- கடனீந்தோர் மற்றும் கடனாளிகளின் பட்டியல்களைக் கூட்டுதல்.
- தானே இருப்புக்கட்டும் முறைப்படி கணக்குப் புத்தகங்கள் பராமரிக்கப்படுமானால், பேரேட்டுக்கணக்குகளின் இருப்புகள், இருப்புச் சோதனைப் பட்டியலில் உள்ள இருப்புகளை ஒத்திருக்கின்றனவா என்று பார்த்தல்.
- இருப்புச் சோதனைப் பட்டியலில் வேறுபாடு இருக்கும் பொழுது, வேறுபடும் தொகைக்கு ஈடான இனம் ஏதேனும் இருக்கிறதா என்று பார்த்தல்.
- நடப்பு ஆண்டின் இருப்புச் சோதனைப்பட்டியலில் இருக்கும் இனங்கள் முந்தைய ஆண்டின் இனங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தல்.
- ரூ 10 அல்லது ரூ 100 போன்ற முழு எண்கள் வித்தியாசப்படுவதற்கு தவறாகக் கூட்டியது காரணமாக இருக்கலாம்.
- ரூபாய் மற்றும் பைசா வித்தியாசப்படுவதைக் கண்டுபிடிக்க எடுத்தெழுகியவற்றையும் இருப்புகளையும் சரிபார்க்க வேண்டும்.
- எண்கள் இடம் மாறியதால் சில சமயங்களில் பிழைகள் ஏற்படலாம் உதாரணமாக, 54க்கு 45 என்றும், 81க்கு 18 என்றும், 72க்கு 27 என்றும் எழுதுதல். இத்தகைய (54-55=9) ஒன்பதினால் வகுபடக்கூடியதாக இருந்தால், வித்தியாசத்திற்குக் காரணம் எண்களின் இடமாற்றமாக இருக்கலாமென்று எடுத்துக் கொள்ளலாம்.

**மோசடிகளைக் கண்டுபிடித்தலும் தடுத்தலும்**

பிறரை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு கணக்குப் பதிவுகளைச் செய்தல் அல்லது பொய்யாகத் திரித்துக் கூறுதல் மோசடி எனப்படும். மோசடி மூன்று வகைப்படும் அவை:

- ரொக்கக் கையாடல்

- சரக்குக் கையாடல்
- கணக்குகளைத் திரித்து எழுதுதல்

**ரொக்கக் கையாடல்**

நல்லதொரு அகச் சோதனை முறை இல்லையென்றால் பெரிய தொழில் நிறுவனங்களில் ரொக்கம் எளிதில் கையாடல் செய்யப்படலாம். கீழ்க்காணும் வழிகளில் ரொக்கத்தை கையாடல் செய்யமுடியும்.

- ரொக்க வரவுகளை கணக்குப் புத்தகங்களில் எழுதாமல் விட்டு விடுதல்
- உண்மையில் தரப்பட்டதை விட குறைவான தொகையை எழுதுதல்
- தொகைகள் செலுத்தப் படாமலேயே செலுத்தப்பட்டதாக எழுதுதல்
- உண்மையில் செலுத்தப் பட்டதை விட கூடுதலான தொகையை எழுதுதல்

**ரொக்கக் கையாடலைக் கண்டுபிடித்தல்**

ரொக்கக் கையாடலைக் கண்டு பிடிப்பதற்கு தணிக்கையாளர் கடை பிடிக்க வேண்டிய விழிகள் பின்வருமாறு:

- ரொக்க ஏட்டை ரொக்கக் குறிப்பேட்டுடன் சரி பார்க்க வேண்டும்
- ரசீதுப் புத்தகத்தின் அடிச் சீட்டுகள், விற்பனையாளர்களின் அறிக்கை போன்றவற்றைப் பரிசோதிக்க வேண்டும்.
- சான்றுச் சீட்டுகள், சம்பளப் புத்தகம், செலுத்தப்பட்ட தொகைகளுக்கான ரசீதுகள், கூலிப் பட்டியல்கள் ஆகியவற்றை சரி பார்க்க வேண்டும்.

**சரக்குக் கையாடல்**

எடை குறைவான அதிகமதிப்புள்ள சரக்குகளை கையாடல் செய்வது எளிது, சரக்குகளை திருடுவதன் முலம் அல்லது பொய்யான வரவுக் குறிப்பு வழங்குவதன் மூலம் சரக்குகளைக் கையாடல் செய்யலாம்.

சரக்குக் கையாடலைக் கண்டுபிடித்தல்

இவ்வகை மோசடியைக் கண்டுபிடிப்பதற்கு தணிக்கையாளர் கடைபிடிக்க வேண்டியவைகள் பின்வருமாறு:

- சரக்குப் பதிவேடுகள், கொள்முதல் மற்றும் விற்பனைகளை கவனமாக சரிபார்க்க வேண்டும்.
- கொள்முதல் மற்றும் விற்பனைக்கான அகச் சோதனை முறை குறித்து விசாரிக்க வேண்டும்.
- இரண்டு பருவங்களின் விற்பனைக்குரிய மொத்த இலாபத்தை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

**கணக்குகளைத் திரித்து எழுதுதல்**

அதிக இலாபம் காட்டும்படியாகவோ அல்லது குறைந்த இலாபம் காட்டும்படியாகவோ அல்லது நட்டமே இல்லாத பொழுது நட்டத்தைக் காட்டும்படியாகவோ கணக்குகள் தயாரிக்கப்படுமானால், அதற்கு கணக்குகளைத் திரித்து எழுதுதல் என்று பெயர். இது வியாபாரத்தின் உயர் அதிகாரிகளால் செய்யப்படுகிறது. இவர்கள் அனைவரும் பொறுப்புள்ளவர்கள் ஆகையால் இவர்கள் மீது எவ்விதச் சந்தேகமும் எழுவதில்லை. எனவே இத்தகைய மோசடியைக் கண்டு பிடிப்பது ஒரு தணிக்கையாளருக்கு கடினமான செயலாகும்.

**கணக்குகளைத் திரித்து எழுதலின் முக்கிய நோக்கங்கள்**

கணக்குகளைத் திரித்து எழுதுதலின் நோக்கங்களைக் கீழ்க்காணும் இரண்டு தலைப்புகளில் படிக்கலாம்.

- இலாபத்தின் மீது ஒரு குறிப்பிட்ட சதவீதம் கழிவாகவோ அல்லது மிகை ஊதியமாகவோ வழங்கப்படுமானால், அவற்றை அதிகமாக பெறுவதற்காக.
- உயர் அதிகாரிகள் தங்களுடைய அதிகத் திறமையினால் தான் ஏராளமான இலாபம் ஈட்டப்பட்டிருக்கிறது என்று பங்கு தாரர்களுக்கு காட்டித் தங்களுடைய இடத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்காக.
- உயர் அதிகாரிகள் பங்குகளை வைத்திருக்கும் பொழுது அவற்றை அதிக விலைக்கு விற்பதற்காக.
- கடன் வசதி பெறுவதற்காக.
- கம்பெனியின் மூலதன வெளியீட்டிற்கு அதிக உறுப்பினர்களைச் சேர்ப்பதற்காக.

**குறைந்த இலாபம் காட்டுவதன் நோக்கங்கள்**

- வருமானவரி செலுத்தவதைத் தவிர்ப்பதற்காக அல்லது குறைப்பதற்காக
- பங்குகளைத் திரும்பச் செலுத்துவதாக இருந்தால், அப்பங்குகளைக் குறைந்த விலையில் பங்குச் சந்தையில் வாங்குவதற்காக

- வியாபாரத்தின் வெற்றி குறித்துத் தவறான எண்ணத்தை ஏற்படுத்தி போட்டியாளர்களைத் தவிர்ப்பதற்காக.

**கணக்குகளைத் திரித்து எழுவதற்கான முறைகள் அல்லது வழிகள்**

- தேய்மானத்தை குறைவாக அல்லது அதிகமாக எழுதுதல் அல்லது எழுதாமலே இருத்தல்
- சொத்துக்களையும் பொறுப்புக்களையும் கூடுதலாக அல்லது குறைவாக மதிப்பிடுதல்.
- ரகசியக் காப்பீட்டைப் பங்குதாரர்களுக்குத் தெரியாமல் பயன்படுத்துதல்.
- வருவாயினச் செலவுகளை மூலதனக் கணக்கில் எழுதுதல் மற்றும் எதிர் மாறாக எழுதுதல்.
- பெறப்பட வேண்டிய வருமானத்தை இலாப நட்டக் கணக்கில் காட்டாமல் விடுதல்.

**பார்வைக்குப் பகட்டான ஒப்பனை**

உண்மைக்கு மாறாக வெளிப்பகட்டான நல்ல நிலையைக் காட்டுதல், பார்வைக்கு பகட்டான ஒப்பனை எனப்படும். இம்முறைறைப் பின்பற்றுவதன் மூலம் இலாபத்தைக் கூட்டிக் காட்டலாம். சொத்துக்களின் மதிப்பை அதிகமாகவோ அல்லது பொறுப்புகளின் மதிப்பை குறைவாகவோ காட்டுவதன் மூலம் இதைச் செய்லாம்.

தணிக்கையாளர் நியாயமான கவனமும் திறமையும் கொண்டிருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால் தான் அவரால் பிழைகளையும் மோசடிகளையும் கண்டுபிடிக்க முடியும். சான்றுச் சீட்டுத் தணிக்கையையும் நடைமுறைச் சோதனையையும் மிகக் கவனமாகச் செய்தும், கணக்குப் புத்தகங்களையும் சான்றுச் சீட்டுகளையும் முழுமையாக சோதித்தும் இருந்தால், அவர் தன்னுடைய பணியில் வெற்றி அடையலாம். எனவே, அவருடைய பணி, முக்கியமாக, அறிவு பூர்வமான மற்றும் கவனமான விசாரணை செய்தலாகும் என்று அறியலாம்.

**தணிக்கையின் நன்மைகள்**

**பிழைகளையும் மோசடிகளையும் கண்டுபிடித்தல்**

- பிழைகளையும் மோசடிகளையும் தணிக்கையின் மூலம் எளிதாகக் கண்டு பிடிக்கலாம். ஆகையால், பிழைகளையும் மோசடிகளையும் செய்வதற்கு பிற்காலத்தில் முயற்சிகள் மேற் கொள்ளப்பட மாட்டாது.

**கணக்கு எழுத்தர்களின் விழிப்புணர்ச்சி**

- கணக்குகளில் முறைகேடுகள் எதுவும் இருந்தால் அல்லது கணக்குகள் சரிவர எழுதப்படாமல் இருந்தால், தணிக்கையாளர் தங்களைப்பற்றி புகார் செய்வார்

என்பது கணக்கு எழுத்தர்களுக்குத் தெரியும். எனவே, அவர்கள் ஒழுங்காகவும் விழிப்புணர்வோடும் செயல்படுவர்.

### கூட்டாளிகளிடையே தகராறு தவிர்க்கப்படுதல்

ஒரு தனிப்பட்ட நபரால் ஒரு கூட்டுவணிக நிறுவனத்தின் கணக்குகள் தணிக்கை செய்யப்படுவதன் மூலம் அதன் கூட்டாளிகளிடையே ஏற்படும் தகராறுகள் தவிர்க்கப்படுகின்றன.

### நன்மதிப்பை மதிப்பிடல்

ஒரு கூட்டாளி சேர்க்கப்படும் பொழுது அல்லது விலகும் பொகுது அல்லது இறக்கும் பொழுது ஒரு கூட்டு வணிக நிறுவனத்தின் நன்மதிப்பை மதிப்பிடுவதற்கு தணிக்கை செய்யப்பட்ட கணக்குகள் பயன்படுகின்றன.

### கம்பெனிப் பங்குதாரர்களுக்கான நன்மை

கம்பெனிகளைப் பொருத்த வரையில் பங்குதாரர்களுக்கு அதன் உண்மையான நிர்வாகத்தில் எவ்வித சம்பந்தமுமில்லை. இருப்பினும், கணக்குகள் முறையாக பராமரிக்கப்படுகின்றன என்பதையும் இயக்குனர்கள் தங்களுடைய தகுதியைத் தவறாகப் பயன்படுத்தவில்லை என்பதையும் கணக்குத் தணிக்கையின்மூலம் பங்குதாரர்கள் உண்மையினை அறிந்து கொள்ள இயலும்.

### வரி அதிகாரிகளின் ஏற்பு

வருமானவரி, சொத்துவரி, மற்றும விற்பனை வரி, அதிகாரிகள் தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளை அவற்றின் விபரங்பகளைப் பார்க்காமலேயே உடனடியாக ஏற்றுக் கொள்வர்.

### தொழில் நிறுவனங்களுக்கு ஆலோசனை

தொழில் நிறுவனங்களுக்கு, தேவைப்பட்டால், நல்ல ஆலோசனைகளை தணிக்கையாளர் வழங்கலாம்.

### பிற நன்மைகள்

கீழ்க்காண்பவைகளுக்குத் தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளே அடிப்படையாகும்

- கடன் வாங்குவதற்கு
- தீ சேதத்திற்குரிய காப்பீட்டுத் கோரலைத் தீர்த்துவைப்பதற்கு
- ஒரு தொழிலை விற்கும்போது விலை நிர்ணயம் செய்வதற்கு.




# தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம்

203, அழகேசன் சாலை, சாயிபாபா காலனி, கோயமுத்தூர் - 641 011.
தொலைபேசி : 0422 - 2441086 நிகரி : 0422 - 2457404
தமிழ்நாடு, இந்தியா.

kalaikathir : 0422 - 2215454/55